2022

ANNUAL PERFORMANCE REPORT

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயற்திறன் அறிக்கை



අපනයන කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
DEPARTMENT OF EXPORT AGRICULTURE

වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
Ministry of Plantation Industries

2022

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயற்திறன் அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

අපනයන කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

DEPARTMENT OF EXPORT AGRICULTURE

වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

Ministry of Plantation Industries

உள்ளடக்கம் பக்கம்

01. அத்தியாயம் - நிறுவனத்தின் விபரம் /நிறைவேற்றுப் பொழிப்பு 05
1.1. அறிமுகம் 05-06
1.2. நிறுவனத்தின் இலக்கு, செயற்பணி, நோக்கம் 07
1.3. பிரதான செயற்பாடுகள் 08
1.4. நிறுவன ஒழுங்கமைப்பு 09
1.5. திணைக்களத்தின் பிரதான அலகுகள் மற்றும் நிறுவனங்கள் 10
1.5.1. திணைக்களத்தின் பிரதான அலகுகள் 10
1.5.2 மாவட்ட பணிமனைகள் 10

02. அத்தியாயம் - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 11
2.1 சிறப்புச் சாதனைகள் மற்றும் அவற்றினை அடைந்து கொள்ளல். 11-25
2.2. சவால்கள் மற்றும் எதிர்கால இலக்கு 25
2.2.1 சவால்கள் 25-26
2.2.2 எதிர்கால இலக்குகள் நோக்கங்கள் 26-28

03. அத்தியாயம் - நிதிச் செயலாற்றுகை 29
3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை 29
3.2 நிதி நிலமைக் கூற்று 30
3.3 நிதிப் பாய்ச்சல் கூற்று 31
3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 32
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை 32
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 32
3.7 நீபி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் மாவட்டச் செயலகம் மகாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு 32
3.8 நிதியல்லா சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை 32
3.9 கணக்காய்வாளர் அறிக்கை 33-40

04 அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டிகள் 41
4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டு திட்டத்தின் அடிப்படையில்) 41
4.1.1 ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டம் 41-46
4.1.2 கட்டட நிர்மானம், திருத்த வேலை, காணி அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் 46-47

05. அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG)அடையும் செயலாற்றுகை 49
5.1 திணைக்களத்திற்கு அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 49-51
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் 51-55

06 அத்தியாயம் - மனிதவள விபரம் 57
6.1 பதவியணி முகாமைத்துவம் 57
6.2 நிறுவனத்தின் செயலாற்றுகை மனித வள பற்றாக்குறை பாதிக்கும் முறை 57
6.3 மனிதவள அபிவிருத்தி 57-59

07 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை 61-67
ஏற்றுமதி விவசாய பயிர்களின் ஏற்றுமதி இறக்குமதி அளவு

இணைப்பு 01 –ஏற்றுமதி விவசாய பயிர்களின் இறக்குமதி ஏற்றுமதி அளவு -2022 69

அத்தியாயம் 01

நிறுவன விபரம்/செயற்பாட்டுச் சுருக்கம்

1.1. அறிமுகம்.

பண்டைய காலம் தொட்டே இலங்கை கறுவாச் செய்கையில் புகழ் பெற்றிருந்தது. இறுப்பினும் 1971 இல் தேசிய விவசாயக் கொள்கையின் கீழ் இத்தொழில் துறைக்கு கவனம் செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1972 ஆம் ஆண்டில், அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றின் மூலம் தோட்டத் தொழில்துறை அமைச்சுடன் இணைந்ததாக சிறு ஏற்றுமதி பயிர்கள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களம் விவசாய அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. உலக உணவுத் திட்டம் (WFP) மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) ஆகியவற்றால் ஆரம்பிக்கப்பட்ட பயிர் பல்வகைப்படுத்தல் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியை திணைக்களத்திற்கு கையளிப்பதோடு அப்போது திணைக்களத்திற்கு சொந்தமாக இருந்த எல்லை நிலங்களில் வாசனைத் திரவியங்கள் பயிரிடுவதற்குப் பதிலாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகள் வாசனைத் திரவியங்கள் சார்ந்த பயிர் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி பயிர் வளர்ச்சியில் ஒரு முன்னோடியாக இருந்தது.

1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் திணைக்களமானது ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் என மறு பெயரிடப்பட்டது. அதனூடாக வாசனைத் திரவியங்கள் மற்றும் ஏனைய விவசாய பயிர்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான சட்ட அதிகாரத்தை அது வழங்கியது. அப்போதிருந்து, திணைக்களம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கமைய வாசனைத் திரவிய துறையில் பிரபல்யம் அடைந்து அதன் வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் தொடர்பில் நாடலாவிய ரீதியில் வளையமைப்பு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் திணைக்களம் இத்துறையில் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கின்றது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பிரதானமாக கறுவா, மிளகு, கிராம்பு, சாதிக்காய், ஏலக்காய், கோப்பி, கொக்கோ, வெற்றிலை, பாக்கு, வெணிலா, பெங்கிரி, சேர, குரக்காய், கித்துல், இஞ்சி மற்றும் மஞ்சள் போன்ற பயிர்களை வாசனைத் திரவிய பயிர்களாக ஏற்றுமதி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. பயிர் அபிவிருத்தியின் போது கோப்பி, கொக்கோ மற்றும் வெணிலா ஆகியவை பானப் பயிர்களாகவும், பாக்கு ஒரு தூண்டுதல் பயிராகவும் கவனத்தை ஈர்த்துள்ளன. அதிக அறுவடையை தரக்கூடிய தொழில்நுட்ப அறிவு, புதுமைகள் மற்றும் பயிர் வகைகளை அறிமுகப்படுத்துவதும், ஏற்றுமதி விவசாய பயிர்களின் அபிவிருத்திக்காக ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி சேவைகளை தொடர்ந்து வழங்குவது திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும்.

அதற்கமைய 2022 ஆம் ஆண்டு திணைக்களத்தின் பொருட்டு நேரடியாக வரவு செலவு திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்த ரூபா 250.00 மில்லியன் ஒதுக்கீடு மற்றும் அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்த ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 610.95 மில்லியன் ஆகவும் மொத்தமாக ரூபா 860.95 மில்லியன் ஊடாக திணைக்களத்தின் மொத்த மூலதன முதலீட்டு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அத்துடன் ரூபா16.5 மில்லியன் மூலதன முதலீட்டில் ஆராய்ச்சி அலகின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உற்பத்தி அளவை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கும் திணைக்களத்தின் பிரதான நோக்கத்தை அடைவதன் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் போது நடுகை மேற்கொள்ளும் பரப்பளவை அதிகரிக்கும் பொருட்டு செலுத்தப்பட்ட அவதானம் மற்றும் ஒப்பீட்டளவில் ஏற்றுமதி பயிர்களின் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை அதிகரிப்பதன் ஊடாக அதிக சந்தை நன்மைகளைப் பெறுவது தொடர்பிலும் 2022 ஆம் ஆண்டில் விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

கட்டுப்படுத்த முடியாத வெளிப்புற தாக்கங்களான கோவிட் - 19 உலகளாவிய தொற்று நோயின் மோசமான விளைவுகள் இருந்த போதிலும், காலநிலை மாற்றம் மற்றும் சந்தை விலைகளின் தாக்கம் ஆகியவற்றின் காரணமாகவும் 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காணப்பட்ட போதிலும் 2021 இல் ஏற்றுமதி வருவாய் ரூபா 102,939.40 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டு அதனை ரூபா 149,050.41 மில்லியனாக அதிகரித்துக் கொள்ள முடியுமாக இருந்தது. சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள மஞ்சள் உற்பத்தியின் சாதக நிலையை அடைந்து கொள்வதற்கு இயலுமாக இருந்தமை ஒரு நேர்மறையான அம்சமாகும்.

1.2. நிறுவனத்தின் இலக்கு, செயற்பணி, நோக்கம்

இலக்கு

பலசரக்கு மற்றும் அது தொடர்பான உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றது.

செயற்பணி

அதிகளவில் அந்நியச் செலாவனியை பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் துறையில் ஈடுபட்டுள்ள சகல பங்குதாரர்களும் நிலையான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் முன்னோக்கிச் சென்று, சூழலை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஏற்றுமதி விவசாய உற்பத்திகளின் அளவிலும் மற்றும் தரத்திலும் அபிவிருத்தியை மேற்கொள்வதன் நிமித்தம் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்.


நோக்கம்

ஏற்றுமதி அளவினை அதிகரித்தல் மற்றும் உற்பத்தியின் தரத்தினை உயர்த்துவதன் ஊடாக உச்ச அளவிலான அந்நியச் செலாவனியை உழைப்பதன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் அலகினை அபிவிருத்தி செய்தல்.

1.3. பிரதான செயற்பாடுகள்

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் ஒழுங்கமைப்பு, விவசாய மேம்பாடு, மற்றும் செயன்முறை.
- பயிர் மேம்பாடு, பயிர் வளர்ப்பு, பயிர் பாதுகாப்பு, அறுவடைக்குப் பின்னரான அனுகுமுறை மற்றும் சமூக பொருளாதாரம் என்பவற்றின் மீது பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- தரமான நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் வினியோகித்தல்.
- பயிர் உற்பத்தி, உற்பத்தித் திறன் மேம்பாடு, மற்றும் தர மேம்பாடு என்பவற்றின் மீது ஏற்றுமதி விவசாய பயிர் உதவி திட்டத்தை அமுலாக்கல்.
- பயிர் பாதுகாப்பு ஆலோசனை சேவை வழங்குதல்.
- ஒருங்கினைந்த பீடை முகாமை மேம்படுத்துதல்.
- ஒருங்கினைந்த தாவர போசனை முகாமை.
- சேதன பண்ணைகளை மேம்படுத்துதல்.
- சந்தைப்படுத்தல், தரநிர்ணயம் மற்றும் விலை போன்றவற்றில் தரவுகள் வெளிப்படுத்துதல்.
- ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி நடுகைப் பொருட்கள் போன்றவற்றினை இறக்குமதி செய்வதில் நின்றும் கட்டுப்பாடு விதித்தல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர்களில் உற்பத்தி செயன்முறை மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர். மற்றும் ஏனைய உற்பத்தியாளர்களுக்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- தோட்டத்துரையினுள் ஏற்றுமதி விவசாய பயிர்களில் மேம்பாட்டிற்காக ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மத்தியில் உறுதியான இணைப்பை ஏற்படுத்துதல்.
- 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருத்தல்.
- ஏற்றுமதி விவசாய பயிர் தொடர்பான கொள்கை விடயங்களில் ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஆலோசணைகள் வழங்குதல்.
- தொழில்நுட்ப மாதிரித் தோட்டங்களை பராமரித்தல்

நிறுவனஒழுங்கமைப்பு–ஏற்றுமதிவிவசாயத் திணைக்களம்



பி.ப.நி-பிரதிப் பணிப்பாளர் நிதி,பி.ப.தொ-பிரதிப் பணிப்பாளர்,பி.ப.ஆ-பிரதிப் பணிப்பாளர் ஆய்வு,பி.ப.நி-பிரதிப் பணிப்பாளர் நிதி,உ.ப-உதவிப் பணிப்பாளர்,அபி-அபிவிருத்தி,திட்-திட்டமிடல்,க.அ-கண்காணிப்புஅலகு, ஊ.பி-ஊடகப் பிரிவு,ப.பா-பயிர் பாதுகாப்பு,ம.ஆ.நி-மத்தியஆய்வுநிலையம்,ஆ.உ.அ-ஆய்வு உப அலகு,பொ.ஆ.அ-பொருளாதாரஆய்வுஅலகு,பள்ளி-புள்ளிவிபரவியலாளர்,வி.ஆ.உ.தி.உ.-விவசாயஆராய்ச்சி உற்பத்தித்திறன் உத்தியோகத்தர்,நி.உ.ம.வ-நிர்வாகஉத்தியோகத்தர் மனிதவள,நி.உ.பௌ.வ.-நிர்வாகஉத்தியோகத்தர் பௌதீகவள,ஆ.அ.உ-ஆய்வுஅபிவிருத்திஉதவியாளர்,அ.உ-அபிவிருத்திஉதவியாளர், வ.செ.தி.உ.-வரவுசெலவுதிட்டஉதவியாளர்,தொ.உ- தொழில்நுட்பஉத்தியோகத்தர்,மு.உ-முகாமைஉதவியாளர்,உ.க.ஆ.-உள்ளகணக்காய்வுஉதவியாளர்,நூ-நூலகர்,வி.உ.-விரிவாக்கல் உத்தியோகத்தர். ஆ.உ-ஆய்வுஉதவியாளர்,த.நி.ப- தரவுநிரற் படுத்துனர். ப.சே.உ.-பண்ணைசேவைஉதவியாளர்

1.5. திணைக்களத்தின் பிரதான அலகுகள் மற்றும் நிறுவனங்கள்

1.5.1. திணைக்களத்தின் பிரதான அலகுகள்

1. அபிவிருத்தி அலகு
2. ஆராய்ச்சி அலகு
3. நிர்வாக அலகு
4. கணக்கீட்டு அலகு

1.5.2. மாவட்டப் பணிமனைகள் 17 பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாணம்	-	கண்டி, மாத்தளை, நுவரெலியா
சப்ரகமுவ மாகாணம்	-	கேகாலை, இரத்தினபுரி
ஊவா மாகாணம்	-	பதுளை, மொனராகலை
தென்மாகாணம்	-	காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை
மேல்மாகாணம்	-	கொழும்பு, களுத்துரை, கம்பஹ
வடமேல் மாகாணம்	-	குருனாகலை,(புத்தளம் மாவட்டம் உள்ளடங்கலாக)
கிழக்கு மாகாணம்.	-	அம்பாறை(மட்டக்களப்புமாவட்டம் உள்ளடங்கலாக)
வடமத்திய மாகாணம்	-	அனுராதபுரம், பொலன்னறுவை

ஆய்வு நிலையங்களினதும் மற்றும் உப அலகுகளினதும் அமைவிடம் வருமாறு

1. மத்திய ஆராய்ச்சி நிலையம் - மாத்தளை
2. கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், பலோல்பிடிய, திஹாகொடை, மாத்தரை
3. இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம், தம்பலஸ்ஸ, நாரம்வலை
4. பொருளாதார சந்தை ஆய்வு அலகு, தலைமை பணிமனை, பேராதனை
5. மலையக ஆராய்ச்சி நிலையம், தெல்பிடிய, கம்பளை.
6. தசை வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் நாற்று மேடை, வல்பிட, கம்பஹா
7. உப ஆராய்ச்சி நிலையம், குண்டசாலை
8. உப ஆராய்ச்சி நிலையம், நில்லம்பே கலஹா

திணைக்களத்தின் மத்திய செடி வளர்ப்பு நிலையங்களின் அமைவிடம்.

குருனாகலை மாவட்டம்	-	செராபீஸ் செடி வளர்ப்பு நிலையம், பொல்கஹவெலை,
	-	ஹொலொன்கொல்ல செடி வளர்ப்பு, தொடன்கஸ்லன்த,
	-	வென்னொருவ செடிவளர்ப்பு நிலையம், நாரம்வலை
நுவரெலியா மாவட்டம்	-	பிளக்வோட்டர், செடி வளர்ப்பு நிலையம் கினிஹத்ஹேன,
	-	முல்ஹல்கெலே, செடி வளாப்பு நிலையம் வலபனை
மாத்தளை மாவட்டம்	-	மத்திய செடி வளர்ப்பு நிலையம் - எல்வெல, உக்குவலை
மாத்தறை மாவட்டம்	-	மத்திய செடி வளர்ப்பு நிலையம் - மாபலான, கம்புருபிடிய
கேகாலை மாவட்டம்	-	மத்திய செடி வளர்ப்பு நிலையம் - கஸ்நேவ, நெலுந்தெனிய
கம்பஹ மாவட்டம்	-	மத்திய செடி வளர்ப்பு நிலையம் - வல்பிடிய
ஹம்பந்தோட்டை மாவட்டம்	-	ம.செ.வ.நிலையம் மற்றும் வாசனைத்திரவிய பூங்கா – மித்தெனிய

அத்தியாயம் 02
செயலாற்றுகை மற்றும் அடுத்த இலக்கு

2.1 சிறப்பு சாதனைகள் மற்றும் கையகப்படுத்துதல்

- 2022 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் நிலவிய எரி பொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி காணப்பட்ட காலப்பகுதியிலும் கூட ஏற்றுமதி விவசாய பயிர் துறையை மேம்படுத்துதல் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதன் ஊடாக உள்நாட்டு பொருளாதாரத்தை கட்டி எழுப்புதல் மற்றும் அதிக அந்நியச் செலாவணியை உழைப்பதை நோக்காகக் கொண்டு 2022 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பொது திறைசேரியின் ஊடாக பெற்றுத் தரப்பட்ட ரூபா 250.00 மில்லியன் ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 240.85 மில்லியன் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு செலவு செய்யப்பட்டதுடன் தோட்ட கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் ஏற்றுமதி விவசாய வலயம் மற்றும் பொருளாதார வீட்டுத் தோட்ட வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டன.

- அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட ஏற்றுமதி விவசாய வலய வேலைத்திட்டத்தின் கீழ் பெற்றுத் தரப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா 400 மில்லியன் தொகையில் இருந்து ரூபா 187 மில்லியன் செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்த வீட்டுத் தோட்ட வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூபா 225 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்துடன் அதில் ரூபா 112.2 மில்லியன் பெறுமதியான வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டு திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டது.தோட்ட அமைச்சின் ஊடாக 2022.09.26 ஆம் திகதி முதல் கன்று ஒன்றின் பொருட்டு செலவிடப்படும் செலவின் ஒரு பகுதி உரிய பயனாளியினால் செலவு செய்ய வேண்டும் என வழங்கப்பட்ட ஆலோசணைக்கு அமைய 2022.09.26 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரை வினியோகிக்கப்பட்ட கன்றுக்கு பதிலாக உரிய நிதி பயனாளிகளினால் செலுத்தப்பட்டதும் கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்த வேலைத் திட்டங்களின் பெறுபேறுகள் தொடர்பில் கவனத்திற் கொள்கையில்

- 2022 புதிய பயிர்ச் செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்றுமதி விவசாய பயிர்களான கறுவா, மிளகு, சாதிக்கா, கராம்பு. கொக்கோ, ஏலம், வெனிலா மற்றும் கோப்பி போன்ற பயிர் செய்கைகள் 272.11 ஹெக்டேயரில் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் திணைக்களத்தின் ஊடாக 2022 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு இருந்த நிலத்தின் அளவு 74% ஆகும். இலக்காகக் கொண்ட அளவினை அடைந்து கொள்ள முடியுமாக இருந்தது. விவசாயிகள் மத்தியில் ஏற்றுமதி விவசாய பயிர் செய்கை பொருட்டு அதிக கேள்வி காணப்பட்டமையால் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இங்கு திணைக்களத்தின் மூலம் சான்றுபடுத்தப்பட்ட ஏற்றுமதி விவசாய பயிர் நடுகை பொருள் பண்ணையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஏற்றுமதி விவசாய பயிர் கன்றுகளின் எண்ணிக்கை 1,147,925 ஆகும்.

- உள்நாட்டில் ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு கறுவா, மிளகு பயிர்கள் பிரதானமாகக் கொண்டு இல்லத் தேவைப்பாடுகள் தமது வீட்டுத் தோட்டத்தின் ஊடாகவே அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டு நாடுமுழுவதையும் உள்ளடக்கியதாக மாவட்ட மட்டத்தில் பொருளாதார திறன்மிக்கதாக ஏற்றுமதி விவசாய பயிர் மாதிரி வீட்டுத் தோட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டு மேலதிக உற்பத்திகள் சந்தைப்படுத்துவதன் ஊடாக இல்லப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில் பொருளாதாரத்தை வலுப்படுத்தி ஏற்றுமதி விவசாய பயிர் மாதிரி வீட்டுத் தோட்டங்களை ஸ்தாபித்தல் மற்றும் ஏற்றுமதி பயிர் மேம்படுத்தும் வேலைத்திட்டம் 2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது.

- சிறிய வீட்டுத் தோட்டத்தில் இருந்து உச்ச அளவில் பொருளாதார பயனை பெற்றுக் கொள்கின்ற மட்டத்திற்கு கொண்டு வருவதை நோக்காகக் கொண்டு சிறிய வீட்டுத் தோட்டங்கள் மற்றும் செழிப்புமிக்க வீட்டுத் தோட்ட வேலைத் திட்டங்களின் பொருட்டு கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் சிறிய வீட்டுத் தோட்ட வேலைத் திட்டத்தின் கீழ் 84,901 உம் செழிப்பான வீட்டுத்தோட்ட வேலைத்திட்டத்தின் கீழ் கன்றுகள் 27,820 பெற்றுக் கொடுக்கப்பட்டது.
- கூட்டு கிராம வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கிராமம் அல்லது பல கிராமங்கள் கூட்டுக் கிராமமாக ஒருங்கிணைக்கப்பட்டு இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. ஒரு கூட்டுக் கிராமத்திற்கு ஆகக் குறைந்தது 25 உறுப்பினர்களை உள்ளடக்கியதாக கூட்டுக்கிராம வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. இங்கு குழுவாக ஒழுங்கமைக்கப்பட்டு இங்கு ஏற்றுமதி விவசாய பயிர் கன்றுகள் வினியோகிப்பது முதல் அறுவடை செய்து சந்தைப்படுத்தும் வரை முறையான திட்டமிடல் தயாரிக்கப்பட்டு விவசாயிகளை உயிர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மற்றும் சந்தை தொடர்புபடுத்துகை மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் வெனிலா, ஏலம், மற்றும் சாதிக்காய் கான்றுகள் 41,456 பகிர்ந்தளிக்கப்பட்டன.

- திணைக்கள ஒதுக்கீட்டின் கீழ் மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கை வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் 20.7 ஹெக்டேயர் பரப்பளவில் மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கைபண்ணப்பட்டது.

- 2022 ஆம் ஆண்டில் பாக்கு செய்கை வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டதோடு இதன் மூலம் சூழல் பாதுகாப்பு நோக்காகக் கொள்ளப்பட்டது. பாக்குச் செய்கை மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் பாக்கு கன்றுகள் 183,859 அளவு வீட்டுத்தோட்ட, அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் தோட்டக்கம்பனிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- 2022 ஆம் ஆண்டில் எற்றுமதி விவாசய பயிர் செய்கை திறனாக மேம்படுத்தும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பயிர் உற்பத்தியின் அளவு மற்றும் தரத்தினை மேம்படுத்துதை நோக்காகக் கொண்டு பிரதான மூன்று அலகுகளின் கிழ் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. சிறந்த விவசாய செயன்முறையினை பயன்படுத்தி தற்போது மேற்கொண்டுள்ள பயிர்ச் செய்கைகளின்

திறனை மேம்படுத்தும் பொருட்டு இடைவெளிக்கான கன்றுகளை இலவசமாக பெற்றுக் கொடுத்தல், ஏற்றுமதி விவசாய பயிர் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப இசைவுறும் வகையில் பொருத்தமான சிறந்த நீர் வழங்கள் முறை அறிமுகப்படுத்தி வைப்பதன் ஊடாக தற்போதுள்ள ஏற்றுமதி விவசாய பயிர் செய்கை நீர் பற்றாக்குறை நிலமையில் இருந்து பாதுகாத்துக் கொள்வதன் பொருட்டு தேவையான சிறுநீர்பாசன வழங்கள் அலகினை ஸ்தாபிக்கும் பொருட்டு தேவையான முதலீட்டு நன்கொடைகள்பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஏற்றுமதி பயிர்களுக்கு பாதிப்பு செலுத்துகின்ற பீடைகள் மற்றும் கால்நாடைகளில் இருந்தும் பாதுகாத்து கொள்ளும் நோக்கில் கற்றாடி மற்றும் வளையமைப்புக்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதற்கு அமைய 828.85 ஹெக்டேயர் நிலப்பரப்பின் பொருட்டு இடைவெளி தாவரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அத்துடன் துளி மற்றும் விசிறல் நீரப்பாசன முறை அமைப்புகள் 02 உம், பாதுகாப்பு வேளி மற்றும் பாதுகாப்பு வளையமைப்புகள் 12 உம் ஸ்தாபிப்பதற்கான செலவு 50% முதலீட்டு கொடை முறையின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுத்த போதும் ஏற்றுமதி விவசாய பயிர்களின் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப செயற்பாட்டை முறையாக 2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்திகளின் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப செயற்பாட்டை முறையாக மேற்கொள்வதன் ஊடாக உற்பத்தித் தரத்தை உயர்த்துதல், பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளின் பொருட்டு ஊக்குவித்தல் மற்றும் அரச முதலீட்டு கொடைகளை பெற்றுக் கொடுக்கின்ற செயற்பாட்டை முறையாக மேற்கொள்வதை இலக்காகக் கொண்டு உச்ச அளவில் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஏற்றுமதி விவசாய பயிர் ஏற்றுமதி விவசாய பயிர்களின் தரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அத்துடன் அரச முதலீட்டு கொடைகளை பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டை முறையாக எதிர்பார்த்து இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்த முதலீட்டு கொடை முறை வெறும் அறுவடை தயாரிப்புக்களின் நவீன தொழில்நுட்ப முறைகள் / இயந்திர உபகரணங்கள் /கட்டடங்கள் /வசதிகள் என்பவற்றை அறிமுகம் செய்து வைத்தல் மற்றும் வழங்கள் செயற்பாடுகளில் மாத்திரமன்றி ஏற்றுமதி பயிர்ச் செய்கைகளின் விவசாய விஞ்ஞானவியல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரத்திற்கு அமைய சிறந்த உற்பத்தி செயன்முறையை (GMP) பின்பற்றி ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கு ஊக்கமளித்தல் (Value Addition), வேலைவாய்ப்புகளை அதிகளவில் உருவாக்குதல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு மொத்த செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- திணைக்களத்தின் ஊடாக அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப முதலீட்டு கொடை முறையின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கறுவா பதனிடும் நிலையங்கள் 42 உம், ஏனைய செயன்முறை நிலையங்கள் 03 கேந்திர பதனிடும் நிலையங்கள் 04, பொருட்டு முதலீட்டு கொடைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப பொறிமுறையின் ஊடாக அறுவடைகளில் உயர் தரத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் மனித சக்தியை குறைவாக பயன்படுத்துதல் ஊடாக உற்பத்தி

செலவை குறைத்துக் கொள்ளும் பொருட்டு இயந்திர உபகரணங்கள் 97 மற்றும் கறுவா எண்ணை பிரித்தெடுப்பு அலகு 13 இன் பொருட்டு கொடைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- பதின்கொல்ல சேதன கிராமத்தின் பொருட்டு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய சேதனச் சான்றிதழை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச சேதனச் சான்றிதழ் தற்போது பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கண்டி மன்தன்டாவல சேதன கிராமத்தின் மூன்றாம் வருட சான்றிதழின் பொருட்டு திணைக்களத்தின் ஒதுக்கீடு அந்த விவசாய ஒழுங்கமைப்புக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- ஏற்றுமதி விவசாய பயிர்களின் பொருட்டு சிறந்த விவசாயச் செயன்முறை (GAP) பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்த விண்ணப்பங்கள் 494பதிவு செய்ததன் பின் கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வருடத்தினுள் சிறந்த விவசாயச் செயன்முறை (GAP) சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை 47 ஆகும்.

- ஏற்றுமதி விவசாய உற்பத்திகளின் தரச் சான்றிதழ் மேற்கொள்வதன் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் கீழ் ISO 22000/HACCP சான்றிதழ் ஒரு செயன்முறை நிலையத்திற்கும், சிறந்த முகாமை செயன்முறை GMP சான்றிதழ் ஒரு செயன்முறை நிலையத்திற்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- வாசனைத்திரவிய துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு தொலைபேசி ஆலோசணை சேவையின் கீழ் 331 நேரடி கலந்துரையாடல் மூலம் ஆலோசணைகள் பெற்றுக்கொடுப்பதற்கான கலந்துரையாடல்கள் 66 இடம் பெற்றன.

- யுரியுப் (youtube) தொழில்நுட்பம் மூலம் எற்றுமதி செயன்முறை மற்றும் உலக சந்தையை வெற்றிக் கொள்ளல் என்பவற்றை இலக்காகக் கொண்டு வேலைத்திட்டங்கள் 11 ஒலிபரப்பு செய்யப்பட்டன.

- ஏற்றுமதி விவசாய துரையில் ஈடுபட்டுள்ளோருக்கு பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு கொள்வனவாளர்களையும் மற்றும் உற்பத்தியாளர்களையும் இணைப்புச் செய்வதற்காக தொழில்நுட்ப ஆலோசணைகள் பெற்றுக் கொள்வதற்காக Whatsapp தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அதற்கான மேடை உருவாக்கப்பட்டது.

- வெளிநாட்டு வாசனைத்திரவிய இறக்குமதியாளர்களது தரவு வளையமைப்பை 2022 ஆம் ஆண்டு கட்டி எழுப்பப் பட்டதோடு அதன் கீழ் உள்நாட்டு இறக்குமதியாளர்கள் 99 பேரிட்கு மேற்கூறப்பட்ட இறக்குமதியாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- வெளி நிறுவனங்களினால் ஒழுங்கமைப்பு செய்யப்படுகின்ற வர்த்தக மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் 07 இன் பொருட்டு வர்த்தக ஆலேசணை அலகின் உத்தியோகத்தர்களினால் வளவாளர்களது பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- மாவட்ட மட்டத்தில் ஏற்றுமதி விவசாய உற்பத்தியாளர்கள் பதிவு செய்வதன் பொருட்டு நடாத்தப்பட்ட தரவுத் தளத்தின் ஊடாக 2022 ஆம் ஆண்டு உற்பத்தியாளர்கள் 180 பேர் பதிவு செய்துள்ளனர்.

- ஏற்றுமதி விவசாய பயிர்களை உயர் தரத்தினாலான அறுவடையை பெற்றுக் கொள்வதன் பொருட்டு தரமான நடுகைப் பொருள் பயன்படுத்துவது மிக முக்கியமாக காணப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டினுள் விவசாயிகளுக்கு உயர் தரமான நடுகை பொருள் பெற்றுக் கொடுக்கப்படும் நோக்கில் திணைக்களத்தின் நாற்று மேடைகள் 12 மற்றும் தனியார் துறை நாற்று மேடைகள் 755 இன் ஊடாக தேவையான நடுகைப் பொருட்கள் பண்ணையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டு திணைக்களத்தின் கஸநேவ நாற்று மேடையின் பொருட்டு தாய் தாவர தோட்டம் ஸ்தாபிக்கப்படுதல், அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் கஸ்நேவ மற்றும் மாத்தளை சிறு நீர்ப்பாசன திட்ட வளையமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் ஏனைய நடுத்தர நாற்று மேடைகள் பொருட்டு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

- ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோர் அறிவு எண்ணக்கரு மற்றும் திறன் என்பவற்றை கொண்டவர்களாக திகழ்வதற்காக பொறுப்புச் சொல்கின்ற ஏற்றுமதி விவசாய சேவை மீளாய்வு பயிற்சி நிலையம் 2022 ஆம் ஆண்டினுள் பொதுபயிற்சி வேலையரங்கு மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்கள் போலவே நிகழ்நிலை தொழில்நுட்பத்தின் கீழ் பயிற்சி வேலைத்திட்டங்கள் பல வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டன. திணைக்கள உத்தியோகத்தர்கள் பொருட்டு கருத்தரங்குகள், வேலையரங்குகள் மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்கள் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. வெளி நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் வேண்டுகோலுக்கு அமைய விஷேட தொழில்நுட்ப பயிற்சி அமர்வுகள் மற்றும் வேலையரங்குகள் பயிற்சி நிலையங்களிலும் மற்றும் உரிய நிறுவன வளாகத்திலும் நடாத்தப்பட்டது. இங்கு விவசாய பாடசாலை, தேசிய தோட்ட முகாமை நிறுவனம், சிவில் பாதுகாப்பு திணைக்களம் வேல்ட் விஷன் நிறுவனம் மற்றும் தொழில்நுட்ப பாடசாலைகள் போன்ற 2022 ஆம் ஆண்டு சேவை மீளாய்வு பயிற்சி நிலையத்தில் தொழில்நுட்ப பயிற்சியை பெற்றுக் கொண்ட வெளியார் சேவை பெறுனர் நிறுவனமாக திகழ்ந்தது. அவ்வாறே இந்த நிறுவனத்தின் பிரதான நோக்கான விவசாயிகளுக்கான பயிற்சிகள் நடாத்துதல் 2022 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட போக்குவரத்து இடையுறுகளுக்கும் முகம் கொடுத்து மாத்தளை, கண்டி மற்றும் குருணாகலை போன்ற இடங்களை கேந்திரமாகக் கொண்டு உயர் கவர்ச்சியின் கீழ் நடாத்தப்பட்டது. இவை யாவற்றிற்கும் மேலாக கோவிட்டுக்கு பின்னரான நிலமையின் கீழ் மிகவும் வெற்றிகரமாக நிகழ்நிலை பயிற்சி வேலைத்திட்டங்கள் மிகவும் முறையாக செவ்வாய்க்கிழமை விவசாய பயிற்சி வேலைத்திட்டம் ஆகவும் மற்றும் புதன் கிழமை ஏற்றுமதி விவசாய முயற்சியான்மையாளர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள் 02 நேரடியாக முகநூலிலும்

மற்றும் யூ ரியுப்பிலும் ஒலிபரப்பு செய்யப்பட்டது. அங்கு வருடம் முழுதும் நிகழ்நிலை பயிற்சிகள் 41 நடாத்தப்பட்டு பயனாளிகள் 92,418 பேர் உருவாகி இருந்தனர். அதற்கும் மேலாக 2022 ஆம் ஆண்டு பயிற்சி வேலைத்திட்டங்கள் 16 பௌதீக ரீதியில் நடாத்தி பயிற்சியாளர்கள் 709 பேர் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் பயிற்சி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- தோட்ட கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற ஏற்றுமதி விவசாய பயிர் பொருளாதார வீட்டுத் தோட்டம், ஏற்றுமதி பயிர் மேம்பாட்டு வேலைத்திட்டம் மற்றும் வீட்டுத் தோட்டம் பொருட்டு மஞ்சள் இஞ்சி கன்றுகள் பெற்றுக் கொடுக்கின்ற உப வேலைத்திட்டங்கள் திணைக்களத்தின் ஊடாக 2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. பொருளாதார வீட்டுத் தோட்ட வேலைத்திட்டத்தின் கீழ் பயிர் செய்கை மேற்கொள்ளக்கூடிய பரப்பளவு ஆகக் குறைந்தது 20 பேர்ச்சஸ் ஆகவும் மற்றும் ஆகக் கூடியது 39 பேர்ச்சஸ் நிலத்தை கொண்டுள்ள ஏற்றுமதி விவசாய பயிர் செய்யைகயில் ஈடுபடுவதற்கு விருப்பம் உள்ள பயனாளிகள் பொருட்டு விவசாய பயிர் கன்றுகள் மற்றும் விதை பெற்றுக் கொடுக்கப்பட்டது. ஏற்றுமதி விவசாய பயிர் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல் மற்றும் அறிமுகம் செய்து வைக்கும் நோக்கில் ஏற்றுமதி பயிர் மேம்பாட்டு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதன் கீழ் அரசாங்க அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு சமூக ஒழுங்கமைப்புக்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுகோல்களின் பொருட்டு இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. நகர மற்றும் அரைநகர இல்லங்களை இலக்காகக் கொண்டு இல்லப்பயன்பாட்டின் பொருட்டு தேவையான மஞ்சள் மற்றும் இஞ்சி தேவை வீட்டுத் தோட்டங்களிலேயே உற்பத்தி செய்து கொள்வதனை இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். அதன் கீழ் ஒரு இல்லத்தின் பொருட்டு தேவைக்கேற்ப மஞ்சள் கன்றுகள் உச்ச அளவிலும் இஞ்சி கன்றுகள் 05 உம் இலவசமாக வழங்கப்பட்டன. இதன் கீழ் மஞ்சள் மற்றும் இஞ்சி கன்றுகள் விவசாய கழகங்களுக்கும் கிராமிய அபிவிருத்தி அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கின் வேண்டுகோலின் பேரில் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- பொருளாதார திறன் மிக்கதாக ஏற்றுமதி விவசாய பயிர் மாதிரி வீட்டுத் தோட்டங்களை ஸ்தாபிக்கும் பொருட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டங்கள் 32,198 ஸ்தாபிக்கப்பட்டன. அத்துடன் அதன் கீழ் 1364.4 ஹெக்டேயர் நிலத்தின் அளவின் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இங்கு மிளகு கன்றுகள் 609,396, கறுவாச்செடி 3,381,750, வெனிலா தண்டுத்துண்டங்கள் 5850 உம் கோப்பி கன்றுகள் 89,839 உம் ஏலம் கன்றுகள் 38,344 உம் மஞ்சள் கன்றுகள் 1,416,825 உம் இஞ்சி கன்றுகள் 214,480 உம் சாதிக்காய் கன்றுகள் 11,190 உம் கொக்கோ கன்றுகள் 17,622 உம் மற்றும் பாக்கு கன்றுகள் 656,151 கிராம்பு 6522 குரக்காய் கன்றுகள் 8720 உம் பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதற்கான நிதி ஒதுக்கீட்டை தோட்ட அமைச்சின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- மேலும், அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற ஏற்றுமதி விவசாய வலய வேலைத்திட்டத்தின் கீழ் அந்தந்த பிரதேசங்களை உள்ளடக்கி மற்றும்

பரிந்துரைக்கப்பட்ட காலநிலை, சமூக மற்றும் விவசாய காரணிகளை கவனத்திற் கொண்டு பொருளாதார ரீதியில் உயர் பயனை பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஏற்றுமதி திறன் கொண்ட பயிர்வகைகளை இனங்காணல் மற்றும் ஏற்றுமதி விவசாய பயிர்களின் தேசிய உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் 2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. இதன் கீழ் ¼ ஏக்கர் முதல் ஏக்கர் 05 வரை கறுவா மற்றும் மிளகு கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இந்த கருத்திட்டம் 17 மாவட்டங்களில் செயற்பட்டடுத்தப்பட்டதோடு ஏற்றுமதி விவசாய வலயங்கள் 334 இன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு அதன் கீழ் 11,959,072 கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டினுள் ஏற்றுமதி விவசாய பயிர் சார்ந்த பல்வேறு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் ஊடாக வெற்றிகரமான பயன்கள் பல பெற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட பயன்கள் பின்வருமாறு

- விதை கிழங்கு அறுவடை செய்யும் காலத்திற்கு ஏற்ப இஞ்சி பயிர் விருத்தி மற்றும் அறுவடை பண்புகள் மாற்றம் அடையும் முறை பரீட்சிக்கப்பட்டது.
  விதை கிழங்குகளின் வயது அதில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற இஞ்சி பற்றைகளில் உள்ள இலைகளின் எண்ணிக்கை, போலி தண்டுகளின் எண்ணிக்கை கிழங்குகளின் பச்சை நிறை மற்றும் உலர் நிறை என்பவற்றின் பால் தெளிவான தாக்கத்தை உண்டுபண்ணுவதாக ஆய்வின் போது கண்டறியப்பட்டது. மேலும் 7 மாத வயதுடைய அல்லது அதற்கு குறைவான காலப்பகுதியில் அறுவடை செய்கின்ற விதை கிழங்குகளை நடும் பொருட்டு பயன்படுத்த கூடாது என தெளிவாகின்றது.

- மஞ்சள் விதை கன்றுகள் விருத்தியின் பொருட்டு மாற்றுப் பாத்திர ஊடகங்கள் மற்றும் போசனை தொடர்பில் ஆய்வு செய்தல்
  இங்கு பல்வேறு பாத்திர ஊடகங்கள் உடன் பல்வேறு போசாக்கு கலவையுடன் மஞ்சள் கன்றுகள் விருத்தியின் பண்புகள் மாற்றம் அடைவது அவதானிக்கப்பட்டது. கிடைக்கப் பெற்ற பயன்களை பகுப்பாய்வு செய்யப்படுகின்ற போது பற்றையின் உயரம், பற்றையின் மொத்த இலைகளின் எண்ணிக்கை,பற்றைகளின் பச்சை மற்றும் உலர் நிறை, புதிதாக விருத்தி செய்யப்பட்ட கிழங்குகளின் பச்சை மற்றும் உலர் நிறை போன்ற சகல விருத்திகள் மற்றும் அறுவடை பண்புகள் போசனை பண்புகளுக்கு அமைய யாரமிலா வளாகம் (yaramilacomplex) அமைகின்ற போது மிகவும் அதிகம் என்பது தெளிவாக அவதானிக்கப்படுகின்றது. அதன் பின்னர் நன்கு விருத்தி அடைந்த மற்றும் அறுவடை பண்புகள் முறையே TSP + யூரியா + MOP கலவை மற்றும் எல்பர்ட் திரவம் பயன்படுத்தப்பட்ட பாத்திர ஊடகங்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பது தெளிவாகின்றது.

- மிளகு நடுகைப் பொருட்களின் அபிவிருத்தியின் பொருட்டு பல்வேறு சேதன மற்றும் அசேதன திரவ உரங்களின் தாக்கத்தை மதிப்பிடல்
  இங்கு பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேற்றிற்கு அமைய அசேதன உர வகையான எல்பேர்ட் Albert திரவம் 3 தடவையாவது பயன்படுத்துவதன் ஊடாக அல்லது கிரீன்

பெப்பர் GreenBeper திரவம் இரண்டு தடவைகள் பயன்படுத்துவதன் ஊடாக இதன் பொருட்டு உரம் பயன்படுத்தவதன் தேவைப்பாடு இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

- மிளகு நடுகைப் பொருட்களின் பொருட்டு மாற்று பாத்திர ஊடகங்கள் கலவையை இனங்காணல்
  பரிசோதனைகள் மூலம் அரைவாசியாக எரிக்கப்பட்ட உமி மற்றும் உக்கிய மரத்தூள் மிளகு பாத்திர ஊடகத்திற்கு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற தேங்காய் தும்புக்கு பதிலாக இலகுவாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது தெளிவாகின்றது.

- மிளகு கோப்பி மற்றும் மஞ்சள் பயிர்களுக்கு நடுகை பொருள் உற்பத்தி செய்யும் பொருட்டு கோழி உரம் பயன்படுத்துதல்
  மேலே கூறப்பட்ட ஆய்வின் போது நடுகை பொருட்களின் அபிவிருத்திபண்புகள் ஒப்பீட்டளவில் குறைந்து காணப்படுவதை போலவே கன்றுகள் இறந்து செல்கின்ற வீதமும் ஒப்பீட்டளவில் அதிகரித்து காணப்படுவதால் பாத்திர ஊடகம் தயாரிக்கையில் கோழி உரம் பயன்படுத்துதல் வெற்றியளிக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

- மிளகு செய்கையில் திசு வளர்ப்பின் ஊடாக மற்றும் ஒற்றை முடிச்சு கொண்ட இலைகளின் ஊடாக உற்பத்தி செய்யப்படுகின்ற நடுகை பொருள் களத்தில் காட்டுகின்ற வளர்ச்சி மற்றும் அறுவடை பண்புகள் ஒப்பீடு செய்தல்.
  இந்த நடுகை பொருள் முறை இரண்டும் களத்தில் ஸ்தாபிக்கின்ற போது வீதாசாரம், வளர்ச்சி மற்றும் அறுவடை பெற்றுக் கொள்கின்ற பண்புகளின் போது தெளிவான மாற்றம் காட்டவில்லை. என்பதால் திசு வளர்ப்பின் ஊடாக உற்பத்தி செய்கின்ற நடுகை பொருள் பொதுவாக வர்த்தக செய்கையின் பொருட்டு பயன்படுத்திக் கொள்ள முடியும் என இனங்காணப்பட்டுள்ளன.

- அம்பாறை பிரதேசத்தில் அறிக்கை செய்யப்பட்ட மஞ்சள் பயிர் செய்கையின் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்தும் பொருட்டு வெவ்வேறு கிருமி நாசினிகளின் தாக்கம் பரீட்சிக்கப்பட்டது.
  இங்குவிதை சிகிச்சையளிப்புக்காக மென்கோசெப் 80% WP (2400ppm) அல்லது கெப்டான் 50% WP (3040 ppm)பயன்படுத்துதல் அல்லது இலைகளுக்கு தெளிப்பு சிகிச்சையாக 1%போடோ கலவை அல்லது மென்கோசெப் 80% WP (2400ppm நட்டி 45 நாட்களில் (இரண்டுமுறை 14 நாட்களுக்கு ஒருமுறை என்றடிப்படையில்) தெளித்தல் மற்றும் மீண்டும் 90 நாட்கள் ((இரண்டுமுறை 14 நாட்களுக்கு ஒருமுறை என்றடிப்படையில்) பயன்படுத்துவதன் ஊடாக நோயை நன்கு கட்டுப்படுத்த முடியும் என்பதுடன் நோய் உண்டாகும் வீதம் (Percentage of Disease Incidence–PDI)குறைவாக உள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. அதனால் நோயின் பொருட்டு பாதுகாப்பு உபமுறையாக மென்கோசெப் 80% WP (2400ppm அல்லதுகெப்டான் 50% WP (3040 ppm)பயன்படுத்துதல் அல்லது இலைகளுக்கு விசிறல் சிகிச்சையாக 1%போடோ கலவை அல்லது மென்கோசெப் 80% WP (3040ppm) அல்லது நட்டி 45 நாட்களில் (இரண்டுமுறை 14 நாட்களுக்கு ஒருமுறை என்றடிப்படையில்) தெளித்தல் மற்றும் மீண்டும்

90 நாட்கள் (இரண்டுமுறை 14 நாட்களுக்கு ஒருமுறை என்றடிப்படையில்) பயன்படுத்துவதன் மூலம் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் ஏற்படாது தவிர்த்துக் கொள்ள முடியும் என்று சிபாரிசு செய்ய முடியும்.

- பல்வேறு அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப முறையின் ஊடாக உலர்த்தப்பட்ட மஞ்சள் உற்பத்தி செய்கின்ற போது உள்நாட்டு மற்றும் இந்தியா மஞ்சள்களின் தரத்தில் ஏற்படுகின்ற மாற்றம் ஆய்வு செய்யப்பட்டது.

  மஞ்சள் கிழங்கின் விரல்கள் மற்றும் துண்டுகள் வெவ்வேறு முறையிலான அவித்தல் மற்றும் உலர்த்தும் முறையை பயன்படுத்தி தயாரிக்கின்ற போது உள்நாட்டு மற்றும் இந்தியா மஞ்சள்களின் தரத்தில் மாற்றத்தை பரீட்சிக்கின்ற போது உலர்த்துவதற்கு முன்னர் அவித்தல் தரம் அதிகரித்து காணப்படுவதோடு தெளிவான தாக்கத்தை செலுத்துகின்றது என்பது அறியப்பட்டது. மேலும் கொதி நீராவியின் ஊடாக அவித்து துண்டாக்கி செயற்கைமுறையில் உலர்த்துவதன் மூலம் அவற்றின கெர்கியுமின் அளவு கிடைப்பதாகவும் இந்தியா மஞ்சள்களில் உள்ள கேர்கியுமின் அளவு உள்நாட்டு மஞ்சளை விடவும் குறைவாக உள்ளது என்பது தெளிவாகின்றது. (கேர்கியுமின் - உள்நாட்டு மஞ்சள் 5.21%, இந்தியா மஞ்சள் 3.16%)

- பைபரின் அடங்கி உள்ள கேர்கியுமின் கப்சியூல் (capsules) உற்பத்தி செய்தல்
  இந்த ஆய்வின் போது மிளகுகளில் இருந்து பிரித்தெடுக்கப்படுகின்ற பைபரின் மற்றும் மஞ்சள் களில் இருந்து பிரித்தெடுக்கப்படுகின்ற கேகியுமின் பைபரின் அடங்கி உள்ள கேர்கியுமின் கப்சியூல் (capsules) வெற்றிகரமாக உற்பத்தி செய்து கொள்வதற்கு இயலுமாகின்றது.

- மிளகில் இருந்து ஒலியோரசின் உற்பத்தியின் போது பாரம்பரிய வெப்பமாக்களுக்கு பதிலாக ஒஹ்மிக் (Ohmic) வெப்பமேற்றலின் ஊடாக ஏற்படுகின்ற மாற்றம் ஆய்வு செய்யப்பட்டது.
  இங்கு பாரம்பரிய முறைக்கு ஒப்பீட்டளவில் வெப்பமேற்றுகின்ற போது ஒலியோரசின் மற்றும் பைபரின் உற்பத்தி தெளிவாக அதிகரித்து காணப்பட்டது. பிரித்தெடுப்பின் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட தூள் மற்றும் கழிவுப் பொருட்களின் நுண்கட்டமைப்பை பரிசோதிக்கின்ற போது தெளிவாகியது யாதெனில் ஒஹ்மிக் வெப்பமேற்றலின் ஊடாக செல் சுவர்களின் சிறிய துளை அல்லது வெடிப்பு ஏற்படுவதாகவும் அதன் ஊடாக கரைப்பான் மற்றும் ஒலியோரசின் துகள்கள் வெளிக்கு செல்வதை இலகுபடுத்துகின்றது.

- விசிறல் உலர்த்துகை (Spray drying)மற்றும் குளிரூட்டல் உலர்த்துகை (Freeze drying)ஊடாகமிளகு ஒலியோரசின் கெப்சியூல்படுத்துதல்.
  பரிசோதனை பெறுபேறுகளின் ஊடாகதெளிவாகியதும் அரபிக் காவியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற விசிறல் உலர்த்துகை முறையை பின்பற்றுகின்ற போது மிகவும் பொருத்தமான ஒலியோரசின் செறிவு 15% (w/w) ஆகும்.நவீனமயப்படுத்தப்படுகின்ற

மாச்சத்து, மொல்டோடெக்ஸ்ரீன் மற்றும் இவற்றின் கலவையாக பயன்படுத்தப்படுகின்ற சேர்ப்புச் செய்யப்படுகின்ற பொருட்கள் ஒப்பிடுகின்ற போது கிடைக்கப் பெறுகின்ற அறுவடை மற்றும் கெப்சியுல்படுத்தப்பட்ட செயற்திறனுக்கு அமைய ஒலியோரசின் கெப்சியுல்படுத்தப்படுவதற்காக மிகவும் பொருத்தமாக சேர்க்கப்பட்ட பொருளாக கம் அரபிக் கவனத்திற் கொள்ள முடியும்.

- உலர்ந்த கருப்பு மிளகுகளில் இருந்து பைபரீன் வேறாக்கிக் கொள்ளும் பொருட்டு மூலோபாயங்களை விருத்தி செய்தல்
  உலர்ந்த கருப்பு மிளகுகளில் இருந்து பைபரீன் வேறாக்கிக் கொள்ளும் போது அதிகம் பரித்தெடுக்கக்கூடிய இயலுமை போலவே அதிக தூய்மையும் (86.5% இற்கு மேல்) பெற்றுக் கொள்வதற்கான ஒரு சிறந்த முறையாகும். அய்சோப்ரோபைல் அற்கஹோலுடன் நீர் ஒடுங்கி பிரித்தெடுப்பு, அய்ரோப்ரோபைல் அல்கஹோல் உடன் சொக்லட் பிரித்தெடுப்பு மற்றும் எதனோல் உடன் சொக்ஸ்லட் பிரித்தெடுப்பு போன்ற முறைகள் பொருத்தமானது என இனங்காணப்பட்டுள்ளது. அங்கு பெற்றுக் கொள்ளப்பட்ட சகல மாதிரிகளினதும் தூய்மை 86.5%இனை விட கூடிய பெறுமதியை காட்டியது.

- பச்சைமஞ்சள் கிழங்கின் ஊடாக கெர்கியுமின் நனோ துகள்களின் தொகுப்பு
  UVஒளியியல் நிறமாலை, FTIRபகுப்பாய்வி மற்றும் தர பகுப்பாய்வி போன்ற உபகரணங்களை பயன்படுத்தி நெனோ கெர்கியுமின்களின் இயல்புகள் இனங்காணப்பட்டது. அந்த முறையின் படி வெற்றிகரமாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு மஞ்சள் கிழங்குகளில் இருந்து நெனோ கெர்கியுமின் உற்பத்தி செய்யப்பட்டது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட கறுவா குறியீடுகளில் உள்ள துண்டுகளின் அங்குரம் வளரும் பொருட்டு தாவர வளர்ச்சி பொருள்களின் தாக்கத்தை பரீட்சித்தல்
  இங்கு சந்தையில் உள்ள கிபரலிக் அமிலம் மற்றும் BAP கலவை 100, 200, 300 மற்றும் 400 ppmஹோர்மோன் செறிவுகள் பயன்படுத்தப்பட்ட போது அந்த செறிவுகளில் அங்குரம் உருவாகுவதை தூண்டும் பொருட்டு தாக்கம் இல்லை என தெளிவாகின்றது.

- மண் இயல்பு பண்பினைக் கொண்டுள்ள கருவபட்டை திசுக்களில் இரசாயண மற்றும் மூல திரவ உள்ளடக்கத்தை அறிந்து கொள்ளல்.
  ஆய்வின் போது மண் இயல்பு பண்பினைக் கொண்டுள்ள கருவபட்டை திசுக்களில் பொதுவான கருவாவை விடவும் கல்சியம் அடங்கி உள்ளதாகவும் தண்டு இறக்கின்ற போது இந்தத் தன்மை தெளிவாக அதிகரிக்கின்றது எனவும் தெளிவாகின்றது.

- கறுவா பயிர் விருத்தி மற்றும் அறுவடை பண்பியல் பால் சந்தையில் உள்ள கறுவா உரக்கலவையின் தாக்கத்தை பரீட்சித்தல்
  திணைக்களம் பரிந்துரை செய்கின்ற வருடத்திற்கு ஹெக்டேயர் ஒன்றிற்கு 900 கி.கிராமிற்கு பதிலாக மாற்று உரக்கலவையாக கூட்டு உரம் (N:P:K 21;07:14) வருடத்திற்குஹெக்டேயர் ஒன்றிற்கு 700 கி.கி. பிரயோகிப்பது பொருத்தமானது எனவும்.

அதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற அறுவடை பரிந்துரை செய்யப்பட் கலவைக்கு சமமானது எனவும் இனங்காணப்பட்டுள்ளது.

- கறுவா கன்று அபிவிருத்தியின் பொருட்டு பல்வேறு பாத்திர ஊடகங்களின் தாக்கத்தை பரீட்சித்தல்
  பாத்திர கலவையின் பொருட்டு அரைவாசி எரிக்கப்பட்ட கறுவா தண்டுகள் அங்குரம் உருவாகின்ற போது கறுவா விதை பயன்பாடு முளைதிறன் ஒப்பீட்டளவில் குறைந்து காணப்படுவதை அவதானிக்கலாம்.

- கறுவா பயிரின் வளர்ச்சி மற்றும் அறுவடையின் பால் பல்வேறு நடுகை பொருள் மற்றும் அதன் பொருட்டு பயன்படுத்துகின்ற சேதன மற்றும் அசேதன உர வீதாசாரத்தில் தாக்கத்தை ஆய்வு செய்தல்
  இங்குதாவர இனப்பெருக்கம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட கன்றுகளுக்கு அதிக உரம் பிரயோகிப்பதற்கு நன்கு உலர்ந்த தோல் அறுவடை செய்து கொள்ள முடியும். அவ்வாறே பொதுவான கறுவா குறியீடுகளை விடவும் சிறி கெமுனு விதை கன்றுகளில் இருந்து அதிக தோலை உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

- கறுவா இலை வெளிரல் நோய்க்கு காரணமான நோய் காரணியான நுண்ணுயிரை இனங்காணல் மற்றும் அந்த உயிரிணங்களின் பூஞ்சைக் கொல்லிகளுக்கு உணர் திறனுக்கான குழாய் ஆய்வை நடாத்துதல்.
  பரிசோதனையின் போது Koch'sஎண்ணக்கருக்களுக்கு அமைய நோயின் பொருட்டு காரணமாக உள்ள நோய் காரணியாக Colletotricumgloeoporioides என்பதை கண்டறியப்பட்டது.

- கறுவா இலையில் எண்ணைகளின் அளவு மற்றும் தரத்தில் இலை துகல்வகை மற்றும் வடிகட்டுதல் நேரத்தின் விளைவினை பரீட்சித்தல்
  இந்த ஆய்வின் போது கறுவா இலையில் எண்ணைகளின் அளவு மற்றும் தரத்தில் பால் இலை துகள் அளவு மற்றும் வடிகட்டல் நேரத்தின்விளைவினை தாக்கம் உள்ளதென இனங்காணப்பட்டுள்ளது.

ஆய்வு வெளியீடுகள

01. யடவத்த வீ.ஜே, மொஹோட்டி ஏ.ஜே மற்றும் சுபசிங்க எச்.எம்.பீ.ஏ.(2022 "விதை இஞ்சியின் பொருட்டு (*Zingiber officnale* Roscoe)அறுவடை செய்வதற்கு பொருத்தமான சரியான அபிவிருத்தி படிநிலையை தீர்மானித்தல்" விவசாய மற்றும் சூழல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு, விவசாய பீடம், இலங்கை ருஹுனு பல்கலைக்கழகம்.
02. இந்துரவ வீ.ஏ.டீ.சீ.எஸ்.ஐ மற்றும் பிட்டனிட் டப்ளியு (2022) "மிளகு அறுவடை, பைபரின் உள்ளடக்கம், ஒலியோரசின் பிரித்தெடுப்பில் உள்ள ஆவியாகுதல் மற்றும் ஆவியாகாத கூறுகள் துகல்களின் அளவு மற்றும் திடகரைப்பான்களின் தாக்கம்" விவசாய வர்த்தக பொறியியல் விஞ்ஞானம். 38 (1): 145-153 https://doi.org./10.1303/aea.14736
03. இந்துரவ வீ.ஏ.டீ.சீ.எஸ்.ஐ மற்றும் பிட்டனிட் டப்ளியு மற்றும் Lorjaroenphon. Y. (2022)."வழக்கமான வெப்பமாக்கள் மற்றும் தயாரிக்கும் மிளகில் ஒலியோரசின் பிரித்தெழுப்பு பொருட்டு ஒமிக் வெப்பமாக்கல் பிரயோகம்". உணவு தயரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான சஞ்சிகைE 16568 https://doi.org./10.1111/jfpp.16568
04. இந்துரவ வீ.ஏ.டீ.சீ.எஸ்.ஐ மற்றும் பிட்டனிட் டப்ளியு (2020)"ஒமிக் வெப்பமாக்கல் துணைகொண்டு பொருட் பிரித்தெடுப்பின் ஊடாக மிளகு ஒலியொரசின் பிரித்தெடுப்பு செய்தல்" கெசடிசாட் பல்கலைக்கழகத்தின் 17 ஆவது கருத்தரங்கின் செயற்குறிப்பு (Kamphaeng Saen) (பக்கம் 3008-3015) கெசடிசாட் பல்கலைக்கழகம், தாய்லாந்து (Kamphaeng SaenCampous, Nakhon Pathom, Thailand)
05. இந்துரவ வீ.ஏ.டீ.சீ.எஸ்.ஐ (2020). மிளகு(*Piper nigrum* L.) "ஒலியோரசின் பிரித்தெடுப்பு மற்றும் உள்ளடக்கம் (Encapsulation) செய்தல்" தொடர்பான கலாநிதி பட்ட ஆய்வுக்கட்டுறை, உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் திணைக்களம், விவசாய பீடம், கெசட்சாட் பல்கலைக்கழகம், பெங்கொக், தாய்லாந்து.
06. கருணாதிலக்க டப்ளியு.டி.கே., ஹெட்டியாரச்சி எஸ்.எஸ்., ரத்நாயக்க ஆர்.எம்.யு.எஸ்.கே,"பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியின் பொருட்டு சூளையில் உலர்த்திய பச்சை புளியங்காய் (Tamarindus indica)தூள்களில் உள்ள பௌதீக இரசாயன பகுப்பாய்வு" விஞ்ஞான தொழில்நுட்ப, பொறியியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு 2022, ஹங்கெரி 17 ஆம் பக்கம்.
07. கருணாதிலக்க டப்ளியு.டி.கே., ஹெட்டியாரச்சி எஸ்.எஸ்., அமரகோன்.ஆர் (2022) புளியங்காய் (*Tamarindus indica)*தூள்களின் போசணை தரத்திற்கு அமைய உலர்த்தும் வெப்பநிலையின் தாக்கம்". உணவு போசனை சுகாதார மற்றும் உயிர் முறைமை தொடர்பான 4 ஆவது சர்வதேச கருத்தரங்கு. 2022 ஜுலை சுருக்க புத்தகம் பக்கம் 15
08. சேனானாயக்க ஐ.கே., முனசிங்க எஸ்,எஸ், திசாநாயக்க டி.டி.எச்.எம்.கே.பிரியதர்ஷனி, டி.டி.சி, திசாநாயக்க டி.எம்.டி மற்றும் முனவீர டி.ஐ.கே.(2021)உருவவியல் விஞ்ஞான பண்புகள் மற்றும் துணை குறிகாட்டிகளை பயன்படுத்தி சாதிக்காவில் பாலினத்தை நிர்ணயித்தல் (*Myristica fraqrance* Houtt)"13 ஆவது வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கு செயலாற்றுகை குறிப்பு, விஞ்ஞான பீடம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்.
09. விஷாதினி எல், விக்ரமசூரிய ஏ, பந்திரப்பிறிய எச், ஆரியவங்ச கே, விமலரத்ன டப்ளியு, செனவிரத்ன ஜே, முனசிங்க எஸ்.எஸ், திசாநாயக்க டி.ஜி.எச்.எம்.கே., சில்வா.டி.டி.(2021) "PCR இனை அடிப்படையாகக் கொண்டு SSR குறியீட்டை பயன்படுத்தி இலங்கையில் பைப்பர் பகுப்பாய்வின் மரபனு பல்வகைமையின் பகுப்பாய்வு"

10. விமலரத்ன டப்ளியு.ஜி.என்.ஏ.லக்ஷிகா ஜே.எம்.வி, வைத்தியதிலக்க எச்.ஏ.என்.எம், செனவிரத்ன ஜே.எம், திசாநாயக்க டி.ஜி.எச்.எம்.கே,மனசிங்க எம்.எஸ்.எஸ், செனவிரத்ன எச்.எம்.ஜி.ஐ.சி.கே, விகரமசூரிய ஏ.எம், ஆரியவங்ச கே.்.ஜி.எஸ்.யு, பந்திராபிரிய எச்.டி.டி, சில்வா ரி.டீ,"உருவவியல் பகுப்பாய்வினை பயன்படுத்தி இலங்கையில் கொலன்னாவ பிரதேசத்தில் வளருகின்ற *Piper nigrum* காட்சிகளின் மரபனுக்களின் பல்வகைப்படுத்தல் தொடர்பில் ஆரம்ப மதிப்பீடு" 41 ஆம் ஆண்டின் வருடாந்த அமர்வுகளின் செயற்பாடுகள் உயிரியல் விஞ்ஞான நிறுவனம், இலங்கை 2021, செப்டம்பர் 24.

11. பபசரா பீ.டி.கே, சமரவீர டீ.என்,"கறுவாவின் (*Cinnamomum zeylanicum* Blume) பொருட்டு பயன்படுத்தப்படுகின்ற நாற்று பாத்திரங்களாக கொக்கோ வெளித்தோல்களின் இயலுமை தொடர்பான கற்கை" சர்வதேச திறந்த பல்கலைக்கழகம் ஆய்வு அமர்வின் வெளியீடு JOURS(2022 டிசம்பர் 10 மற்றும் 11)

12. மதுபாஷினி டப்ளியு.கே.ஏ, வீரசூரிய எஸ்.என், கலஹிடிகம, ஜி.ஏ.எச், (2022) "சிறி கெமுனு மற்றும் சிறி விஜய போன்ற கறுவா இனங்களின் பூ பூத்தல் மகரந்தச் சேர்க்கை மற்றும் பழத் தொகுப்பு தொடர்பான பண்புகளை ஆய்வு செய்தல்" பட்டம் எதிர்பார்ப்பு ஆய்வுக் கருத்தரங்கு, விவசாய விஞ்ஞான பீடம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

13. பதிரகே எஸ்.எஸ்.எஸ்., தரங்கா கே.எச்.எம் மற்றும் அம்பிடியவத்த ஏ.டி "கறுவாக்களல் சேதன உள்ளீடகளின் மதிப்பீடு (*Cinnamomum zeylanicum* Blume)", உலர் வலயத்தில் விவசாயம் தொடர்பான 8 ஆவது சர்வதேச கருத்தரங்கு, 2022 செப்டம்பர் 14, விவசாய பீடம், யாழ்ப்பாணப பல்கலைக்கழகம், இலங்கை.

14. நயேந்திரா டப்ளியு.ஜி.என், தரங்கா கே.எச்.ஜி.எம் மற்றும் யாப்பா பி.ஐ,"போசனை பதார்தத்தை தக்க வைக்கின்ற மற்றும் விடுவிப்புச் செய்கின்றமை தொடர்பில் கறுவா மரக்குற்றி உயிரியல் அரும்பு தயாரிப்பு முறையின் தாக்கம்" உலர் வலயத்தில் விவசாயம் தொடர்பான 8 ஆவது சர்வதேச கருத்தரங்கு, 2022 செப்டம்பர் 14, விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

15. மதுரங்கி எச்.எம்.ரி.ரி., வனிகதுங்க ஆர்.பீ ஜயசிங்க ஜீ.ஜீ, அத்தநாயக்க ஆர். என்,"கறுவா (*Cinnamomum zeylanicum* Blume) இலை கருகல் நோயை ஏற்படுத்துகின்ற நொயக்கிருமி பூஞ்சையை இனங்காணல் மற்றும் தாவரவியல் விஞ்ஞான பொருட்டு இலங்கை சங்கத்தின் 2 ஆவது தேசிய கருத்தரங்கின் வெளியீடு SLAMPP (2022) பக்கம் 18 (2022)

16. சில்வா என்.எஸ்.டப்ளியு.ரி.எச், மதுரங்கி எச்.எம்.ரி.ரி, ஜயசிங்க ஜீ.ஜீ, ரத்நாயக்க ஏ.எம்.ஜி.என் மற்றும் பிரேமதிலக்க யு.ஜி.ஏ.ரி,"கறுவா செய்கைக்கு ஏற்படுகின்ற வெள்ளை பூ நோய்க்காரணமாக பங்கசான ரிஜிரோபொரஸ் மைக்ரோபொரஸ் (*Rigidoporus microporus*)இல் உள்ள மைசீலியம் பண்புகளை இனங்காணல் மற்றும் ஆய்வு நிலமையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பங்கஸ் கொல்லிகளுக்கு எதிராக நோய்காரணிளை அபிவிருத்தி செய்வது தொடர்பான கற்கை". விவசாயம் தொடர்பான 5 ஆவது தேசிய கருத்தரங்கு (5th NSA 2022) விவசாய பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை பக்கம் 47(2022)

17. விதானபதிரன சீ.யு, யெப் எஸ்.ஏ, மென்பஜிரேட் ஆர். யுலிடிஸ்கா, ஜயசிங்க ஜீ.ஜீ."இலங்கையில் உண்மை கறுவா *Cinnamomum verum* J. Presl தாவரத்தில் பீடையாக தென் அசியா வலயத்தில் *Helionothrips annosus*வென்க், 1993 (தைசெனொப்டரா, திரிபிடே இனம்) இன் முதலாவதது அறிக்கை செய்தல் மற்றும் மீள விபரித்தல்" 18 (6) ஆவது சரிபார்ப்பு பட்டியல், (Check list 18 ()6) (2022) : 1195-120 I https://doi.org/10.15560/18.6.1195

18. சானிகா எம்.கே.எஸ், விதானபதிரன சீ.யு,ரூபசிங்க சீ.பி, மதுரங்கி. எம்.ரி.ரி. ஜயசிங்க ஜீ.ஜீ,“ இலங்கையில் கறுவா (*Cinnamomum zeylanicum* Blume)நாற்றுமேடை மற்றும் நடுகையில் இலை உண்ணி (*Acrocercops* spp.)மற்றும் தாவர உண்ணி (*Helionothrips annosus)* என்பவற்றின் ஒழிப்பின் பொருட்டு பூச்சுப் பொறிகளை பயன்படுத்துதல” விவசாய பொறியியல் விஞ்ஞானம் மற்றும் சூழல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டத்திற்கு எதிர்பார்க்கின்ற ஆய்வு அரங்கு 2022, ருஹுனு பல்கலைக்கழகம்.
19. விஜேரத்ன ஆர்.எம்.என், விஜேவீர ஏ.ஏ, மாபா எம்.எஸ்.ரி,“*Candida albicans*பங்கஸ் விஷேடத்திற்கு எதிராக சிட்ரனெல்லா (*Citronella nardus* and *Cymbopogon winterianus*)இல் தெரிவு செய்யப்பட்ட நுழைவுகளின் எண்ணையின் தரம் மற்றும் பூஞ்சை எதிர்ப்பு செயல்பாடு தொடர்பாக நிர்ணயித்தல்”ICIET/ உயிரியல் தொழில்நுட்பம், உயிரியல் பொறியியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப உயிரியல் தயாரிப்பு பக்கம் 201(2022)
20. நிர்மன்ன எம்.ஏ, விஜேவீர ஏ.ஏ, சிந்துஜா எல்.பி, (2022) “அங்கிகரிப்புக்கு தயார் நிலையில் உள்ள கறுவா(*Cinnamomum zeylanicum* Blume)அடங்கிய வரக்கா பாணம் ஒன்றினை விருத்தி செய்தல் மற்றும் தர மதிப்பீடு” தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் புதிய உற்பத்திகள் தொடர்பான கருத்தரங்கு 2022 (TechInn 2022) தொழில்நுட்ப பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
21. விஜேவீர.ஏ.ஏ, விதானபதிரன சீ.யு, பெரேரா ஜி.எஸ்.எம், மற்றும் ஜயசிங்க ஜீ.ஜீ (2022) “இலங்கையில் தென் மாகாணத்தில் பெறுமதியில் தயாரிக்கப்பட்ட கறுவாக்களின் தரத்தை மதிப்பீடு செய்தல்” விவசாய மற்றும் சூழல் தொடர்பான கருத்தரங்கு, 2022 ருஹுனு பல்கலைக்கழகம் இலங்கை.
22. தயாரத்ன ரி.எஸ்.பி, விஜேவீர ஏ.ஏ, மனம்கொடை டி.எஸ்.ஸயசிங்க ஜீ.ஜீ. மற்றும் விதானாபதிரன சீ.யு (2022) புத்தக புழு நோய் மற்றும் இலைகருகல் நோய் என்பவற்றை ஏற்படுத்தும் கிருமியை அழிக்கும் பொருட்டு மாற்று சேதன பங்கஸ் நாசினியாக உள்நாட்டு மூலிகை சாறுகளை பயன்படுத்துதல்.” விவசாய மற்றும் சூழல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு 2022 ருஹுனு பல்கலைக்கழகம் இலங்கை.
23. ஹன்சிகாகே ஏ.எஸ், கொடிகார கே.ஏ.எஸ். விஜேவீரஏ.ஏ, சேனாநாயக்க ஜீ, ஜயதிஸ்ஸ எல்.பி, (2022) “இலங்கையில் இடைவெப்ப வலயத்தில் செய்கை பண்ணப்படுகின்ற கறுவா *Cinnamomumverum* J. Presl) களின் விருத்தி மற்றும் பாலியல் விஞ்ஞானம்” இலங்கை J.Natn.Sci. அடிப்படை 2022,50(1):87-99 DOI: http://dx.doi.org/10.4038/jnsfsr.v50i
24. விஜேவீர ஏ.ஏ, ஹெட்டியாரச்சி எஸ்.ஆர்,ஹேவகே ஜே.டப்ளியு, வடுமைத்திரிகே எஸ்.எச். மற்றும் ஜயசிங்க ஜீ.ஜீ (2022) “பல்வேறு விவசாய சூழல் வலயங்களுக்கு இடையே இலங்கை கறுவா (*Cinnamomum zeylanicum* Blume)எண்ணையின் அறுவடை மற்றும் தரம் என்பவற்றை ஒப்பீடு செய்தல்”9 ஆவது சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கருத்தரங்கு ருஹுனு பல்கலைக்கழகம்,மாத்தறை. இலங்கை 72 ஆம் பக்கம்
25. ரூபசிங்க பீ.ஏ.எச்.ஐ, பிறியதர்ஷனி கே.டி.என், மற்றும் நிலன்த கே.ஏ.ஆர் (2022) “கறுவா நாற்றுக் கன்றுகள் (*Cinnamomum zeylanicum* Blume)விருத்தி செய்தல் மற்றும் நீர் வழங்கும் கால அடிப்படையில் நன்கு உறிஞ்சக்கூடிய பல்வேறு உறுப்புக்களின் (SAPs)தாக்கம் உள்ளூராட்சி மற்றும் தலைமைத்துவம் தொடர்பான 1 ஆவது சர்வதேச கருத்தரங்கு செயற்பாடு பக்கம் 34-35
26. பிறதிஹானி எம், ரனவக்க ஆர்.ஏ.ஏ.கே.ஜயசேகர எல், ஜயசிங்க ஜீ.ஜீ.சேனாநாயக்க ஜீ. மற்றும் கிகியனாகே எஸ் (2022). “தெல்பிடிய மத்தியநாட்டு ஆராய்ச்சி நிலையத்தில்

செய்கை பண்ணப்படுகின்ற கறுவாவின் மரபனு சேகரிப்பின் உருவவியல் விஞ்ஞான பண்புகள்"விவசாய மற்றும் சூழல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு 88 ஆம் பக்கம.

2.2. சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

2.2.1. சவால்கள

1. திணைக்களத்தின் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையின் அளவு மட்டுப்படுத்தப்பட்டு உள்ளமையால் இலக்காகக் கொண்ட திணைக்கள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் செயற்பாடுகள் சவால்களுக்கு உள்ளாகின.
2. விவசாய நிலத்திற்கு தேவையான தொழில்நுட்பத்தை மிகவும் திறமையானதாக மாற்றுவதில் மிகவும் பயனுள்ளதாக விவசாய விரிவாக்க சேவையானது பங்காற்றினாலும், திணைக்களத்திற்கு தேவையான கள உத்தியோகத்தர்களது எண்ணிக்கைக்கும் தற்போது பணியமர்த்தப்பட்டுள்ள கள அலுவலர்களின் எண்ணிக்கைக்கும் இடையே இன்னும் பெரிய இடைவெளி உள்ளது. இந்த விரிவாக்க உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பது அவசியம் ஆகும்.
3. திணைக்களத்தின் பொருட்டு தேவையான பௌதீக வசதிகள் போதிய மட்டத்தில் வழங்குவதற்கு முடியாது உள்ளதுடன் உத்தியோகத்தர்களுக்கு அலுவலக வசதிகள், உபகரணங்கள் மற்றும் பொருட்களின் தேவைப்பாடு மற்றும் போக்குவரத்து வசதிகள் உரியவாறு வழங்குவதற்கு போதிய அளவு ஒதுக்கீடு திணைக்களத்திற்கு இல்லாமையானது ஒரு பெறும் சவாலாக காணப்பட்டது.
4. தாவர பாதுகாப்பு அலகு மற்றும் தோட்டக்கலை விஞ்ஞான அலகின் பொருட்டு போதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் காணப்படாமை.
5. அறுவடைக்கு பின்னரான ஆய்வக ஆய்வுகூட வேலைத்திட்டத்திற்கு உரிய செயற்பாடுகள் தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு திறன்மிக்க போதிய உதவி பதவியனியினர் (விஞ்ஞான அறிவுடன் கூடிய)இல்லாமை
6. மண் மற்றும் தாவர ஊட்டச்சத்து பிரிவு மற்றும் அறுவடைக்கு பின்னரான ஆய்வக நிறுவனத்தினுள் ஆய்வு மாதிரிகளின் பகுப்பாய்வு மற்றும் வெளியில் இருந்து கிடைக்கப் பெற்ற மாதிரிகளின் ஆய்வினை மேற்கொள்வதின் பொருட்டு இரசாயண பொருள் போதியதாக இல்லாமை. (போதிய ஒதுக்கீடு இல்லாமை காரணமாக)
7. மண் மற்றும் தாவர ஊட்டச்சத்து பிரிவில் ஆய்வுகூட அங்கீகாரம் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு போதிய உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை. உதாரணம் : ஆய்வுகூட பதவியனியினர் பொருட்டு பாதுகாப்பு சூழல்.
8. பயிர் - நீர் - மண் தொடர்பான தொடர்பு பற்றிய ஆய்வு மேற்கொள்வதற்கு தேவையனா விஞ்ஞான உபகரணங்கள் இல்லாமை.
9. எரிபொருள் பொருட்டு ஒதுக்கீடு குறைப்பதன் காரணமாக ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதித்தல் மற்றும் தடைகள் ஏற்படுதல்
10. ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் நடுகை பொருள் உற்பத்தியின் பொருட்டு வளை இல்ல வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுதல்

11. பெறுமதி சேர்க்கப்பட்ட பயிற்சி வேலைத்திட்டம் ஒன்று நடாத்துவதற்கு தேவையான வசதிகளுடன் கூடிய இடம் ஒன்று இல்லாமை. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி உற்பத்திகளின் பொருட்டு தேவையான சகல உபகரணங்களும் கண்ணாடிப் பொருள்மற்றும் ஆய்வுகூட பொருள் ஆய்வுகூடத்தில் இருந்து பயிற்சி நிலையத்திற்கு கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள.
12. நோய் நுண்ணுயிரிகளை சரியாக இனங்காணும்பொருட்டு மூலக்கூற்று பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பினும் ஆரம்ப மூலக்கூற்று ஆய்வுகூட வசதிகள் இல்லாமை காரணமாக ஆய்வு கற்கைகள் மட்டுப்படுத்துப்பட்டுள்ளதுடன் தாவர பாதுகாப்பு அலகின் பொருட்டு சேவையை வெளியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கான செலவு அதிகம் மேற்கொள்ளப்பட வேண்டியதுமாக உள்ளது.
13. நுண்ணுயிரியல் விஞ்ஞான கற்கையின் பொருட்டு தேவையான விஷேடமான நடுகை ஊடகங்களை கொள்வனவு செய்வதற்கு முடியாது இருத்தல்.
14. பொருளாதார நெருக்கடியுடன் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அதிக எரிபொருள் செலவு சமூக பொருளாதார ஆய்வு அலகுகளுக்கு உரிய கள பரீட்சிப்புக்களை நடாத்துகின்ற போது பாரிய தடைகள் காணப்படுகின்றன.

2.2.2. எதிர்கால இலக்குகள் / நோக்கங்கள்

- ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல்

  2022 ஆம் ஆண்டில் ஏற்றுமதி பயிர்களில் இருந்து 58,192.95 மெற்றிக் தொன் ஏற்றுமதியின் மூலம் கிடைத்த ஏற்றுமதி வருவாய் ரூபா 140,050.41 மில்லியன் வருமானம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்கியது. அத்துடன் அது முன்னைய ஆண்டை விட அதிகமாக காணப்பட்டு இருந்ததுடன், 2025 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாய் ரூபா 150 பில்லியனை அடைவதனை நோக்காகக் கொண்டு தற்போது செய்கை மேற்கொள்ளப்படும் நிலப் பரப்பை அதிகரிப்பது அலகு ஒன்றில் இருந்து பெறப்படும் அறுவடையை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பயிர் செய்கையாளர்கள், உற்பத்தியாளர்கள் பதனிடுவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆகியோரை ஒன்றினைப்பதன் மூலம் அதிக அன்னியச் செலாவனியை பெற்றுக் கொள்வதன் பொருட்டு அறிவூட்டல் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு அதன் மூலம் ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தியாளர்களது வருமானத்தை பலப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

- கருவாவிற்கான புவியியல் அடையாளச் சான்றிதழை பெற்றுக் கொள்ளல்.

  ஏற்றுமதி விவசாய திணைக்களம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இனைந்து இலங்கை கறுவாச் செய்கையின் பொருட்டு கறுவா புவியியல் அடையாள சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கை கறுவா உற்பத்திகளுக்கான அடையாளச் சான்றிதழ் சந்தை வாய்ப்புக்களை உருவாக்குகின்ற போது உருவாக்கப்படுவதோடு, உண்மையாக உற்பத்தி செய்யப்படும் உலகில் ஒரே நாடாக சர்வதேச சந்தையில் இலங்கைக்கு உரித்தாகக் கூடிய இடத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும் பாதுகாப்பான சந்தையின் ஊடாக உச்ச அளவில் அன்நியச் செலாவனியை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இதன்

பொருட்டு மாவட்ட மட்டத்தில் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு 2023 ஆம் ஆண்டு ஜேர்மனில் நடைபெறவுள்ள சர்வதேச வாசனைத்திரவிய கண்காட்சியின் பொருட்டு கறுவாவிற்கான புவியியல் அடையாளச் சான்றிதழை பெற்றுக் கொண்ட கறுவாவை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- சேதனப் பயிர்ச் செய்கையை பிரபல்யப்படுத்துதல்
  அரசினால் இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் சேதன உர உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் காரணமாக சந்தையில் இரசாயன உரங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதால், சேதன விவசாயத்தில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர். மேலும், சேதன உற்பத்திகளின் பொருட்டு பொருட்களுக்கு சந்தையில் நிலவும் அதிக விலை காரணமாக, சேதன பயிர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை அடைந்து கொள்ளும் நோக்கில், சேதன ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் பரப்பளவை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அங்கு திணைக்களத்தினால் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கவும் தேவையான விரிவாக்கத் திட்டங்களுக்கு நிதியைப் பெறுவது அவசியம்.

- சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றுபடுத்தல் செயல்முறை, சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) வேலைத்திட்டம் மற்றும் ஏற்றுமதி பயிர் பதப்படுத்தும் மையங்களை செயல்படுத்துதல்.
  பொருளாதார ரீதியாக அதிக அன்னியச் செலாவணியை ஈட்டுவதற்கு, ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி, பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக வருமானம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை கருத்தில் கொள்வது அவசியம். சிறந்த உற்பத்தி நடைமுறைகள் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் களத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் மத்தியில் பிரபலப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், ஆர்வமுள்ள உற்பத்தியாளர்களை ஈர்க்கவும், நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அறிமுகப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் திணைக்களம் தலையிடும். இதன் கீழ், அதிக ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிக வெளிநாட்டு வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

- 2022 ஆம் ஆண்டில் கொரோனா தொற்று நிலைமை இருந்த போதிலும், திணைக்களம் தொடர்ந்து அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்தி வந்தது. திணைக்களத்தின் ஊடாக இணையதளங்கள்,Face book, Zoom இணைய வசதிகள் மற்றும் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் தொலைபேசி போன்ற வழிமுறைகளின் ஊடாக திணைக்கள உத்தியோகத்தர்களால் ஏற்றுமதி பயிர்கள் குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டது.
- புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட கறுவா இன நாற்றுக் கன்றுகளை உற்பத்தியை மேம்படுத்துதல்.

- புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட கறுவா இனங்களின் தாய் தோட்டத்தின் பொருட்டு பயிர் முகாமை முறையே (package)அபிவிருத்தி செய்தல்.
- புதிய கறுவா இனங்களை வழங்குதல்
- இரசாயனமற்ற பீடை மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறையை அறிமுகம் செய்தல்.
- கறுவாவின் பொருட்டு ஒருங்கிணைந்த களை முகாமை முறையே (package)அறிமுகம் செய்தல்
- கறுவா செய்கைக்கு முதுகெழும்பு பூச்சி சேதத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்.
- ஊட்டச்சத்து மற்றும் ஒக்சிஜனேற்ற பண்புகள் உடன் புதிய கறுவாவின் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்தி அபிவிருத்தி செய்தல்.
- கொம்போஸ்ட் பகுப்பாய்வு அளவுருக்களுடன் மண் மற்றும் தாவர போசாக்கு அலகின் அங்கீகரிக்கப்பட்ட பாடப்பரப்பினை விஸ்தரித்தல்.
- பொருளாதார ஆய்வு அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை டிஜிட்டல்மயமாக்கல்.

  பண்ணை விலை ஒன்று சேர்த்தல், பயிர் தரவுகளை ஒன்றுதிரட்டல் மற்றும் களஞ்சியம் போன்றவற்றை அவற்றிற்கு சேரத்தல். நாடலாவியரீதியில் பண்ணை விலைகளை ஒன்று சேர்க்கும் பொருட்டு நிகழ்நிலை தரவுதளம் ஒன்றினை உருவாக்குவதற்கு அடிப்படை கலந்துரையாடல் மற்றும் திட்டமிடல் என்பன தற்போது தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன.

- ஏற்றுமதி விவசாய பயிர்களுக்கு உரிய பல காலத்திற்கேற்ற பொருளாதார பிரச்சினைகளை இனங்கண்டு மற்றும் அவற்றிற்கு தீர்வுகளை கண்டறியும் பொருட்டு ஆய்வு திட்டமிடல் மேற்கொள்ளல் மற்றும் திட்டமிடல்களை உருவாக்கல்.
- கறுவா, மிளகு, கிராம்பு நெட்டி, சாதிக்காய் உட்பட பிரதான ஏற்றுமதி விவசாய பயிர் பொருட்டு உரிய பயிர் முன்னறிவித்தல் செய்யும் பொறிமுறையை இனங்கண்டு ஸ்தாபித்தல்.

.....

ஏ.பீ.பீ.திஸ்னர்
பணிப்பாளர் நாயகம்
ஏற்றுமதி விவசாய திணைக்களம்

A.P.P. DISNA
Director General
Department of Export Agriculture
1095, Sirimavo Bandaranayake Mawatha,
Peradeniya

அத்தியாயம் 03

நிதி நிலமைக் கூற்று அறிக்கை

3.1. நிதி செயல்திறன் கூற்று

2022.12.31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்றகான நிதி செயல்திறன் கூற்று. ACA-F

வரவு செலவு திட்டம் 2022		விடயம்		குறிப்பு		உண்மையான		
						2022	2021	
		வருமான பெறுகைகள்						
-		வருமான வரி		1		-	-	
-		பொருட்கள் சேவைகள் மீதான வரி		2		-	-	
-		வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி		3		-	-	ACA 1
-		வரியல்லா வருமானங்கள் மற்றும் ஏனைய		4		-	-	
-		மொத்த வருமான பெறுகைகள் A				-	-	
-		வருமானமல்லா பெறுகைகள்				-	-	
2,354,249,860		திறைசேரி கட்டுநிதி				1,633,160,000	1,179,550,000	ACA 3
		வைப்புக்கள்				86,978,491	4,864,487	ACA 4
35,000,000		முற்பனக் கணக்குகள்				40,885,228	43,042,029	ACA 5/5(a)
		ஏனைய பெறுகைகள்						
2,389,249,860		மொத்த வருமானமல்லா பெறுகைகள் (B)				1,761,023,719	1,227,456,516	
2,394,249,860		மொத்த வருமான பெறுகைகள் + மொத்த வருமானமல்லா பெறுகைகள் (C) = (A) +(B)				1,761,023,719	1,227,456,516	
		திரைசேறி பெறுகை				119	1,927	
2,394,249,860		தேறிய வருமானம் பெறுகைகள் C) = (A) +(B)				1,761,023,600	1,227,454,589	
		கழி : செலவினங்கள்						
		மீண்டுவரும் செலவுகள்						
716,000,000		கூலி, சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள்		5		696,666,692	629,847,910	ACA 2(ii)
88,000,000		ஏனைய பொருட்கள் சேவைகள்		6		59,250,320	71,209,393	
17,000,000		மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்		7		14,924,175	9,901,734	
		வட்டி செலுத்துதல்		8				
		ஏனைய மீண்டுவரும் செலவுகள்		9		-	-	
821,000,000		மொத்த மீண்டுவரும் செலவுகள் (D)				770,841,187	710,959,037	
		மூலதனச் செலவு						
20,500,000		மூலதன சொத்துக்களின் புனர்நிர்மானம் மற்றும் மேம்பாடு		10		14,455,901	12,590,281	
		மூலதனச் சொத்துக்களின் சுவீகரிப்பு		11			11,625,392	
250,000,000		மூலதன மாற்றல்கள்		12		240,853,621	360,697,382	
		நிதிச் சொத்துக்களின் சவீகரிப்பு		13				ACA 2(ii)
1,500,000		இயலுமை கட்டமைப்பு		14		789,075	409,325	
9,000,000		ஏனைய மூலதனச் செலவுகள்		15		8,221,318	13,108,232	
281,000,000		மெத்த மூலதனச் செலவுகள் (E)				264,319,915	398,430,612	
		பிரதான பேரேட்டுச் செலவுகள் (F)						
		கொடுப்பனவுகள் வைப்பிலிடல் 14				2,555,937	3,303,161	ACA 4
40,000,000		முற்பன கொடுப்பனவு 15 வேறு பிரதான பேரேட்டுக் கணக்க				43,604,499	51,433,938	ACA 5/5(a)
40,000,000		பிரதான பேரேட்டுச் செலவு 14+15				46,160,436	547,737,100	
1,142,000,000		மொத்த செலவு G= (D+E+F)				1,081,321,538	1,164,126,748	
		2022 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த கட்டுநிதி மீதி H=(C-G)				679,702,062	63,327,841	
		கட்டுநிதிக்கு அமைய இருப்பு					63,327,841	ACA 7
		டிசம்பர் 31 கட்டுநிதி மீதி					63,327,841	ACA 3

3.2. நிதி நிலமைக்கூற்று

ஏசீஏ-பீ

2022.12.31 இல் உள்ளவாறு
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உள்ளவாறான 2022 ரூபா	2021 ரூபா
நிதியல்லாத சொத்துக்கள்			
ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள்	ஏசீஏ-6	1,107,015,274.00	1,110,288,684.00
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்கு	ஏசீஏ-5/5(ஏ)	130,201,196.00	127,481,925.00
காசு மற்றும் அதற்கு சமமானவை	ஏசீஏ-3		
மொத்த சொத்துக்கள்		**1,237,216,470.00**	**1,237,770,609.00**
தேறிய சொத்துக்கள் / உரிமை			
தேறிய சொத்துக்கள்		43,573,120.00	125,276,403.00
ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் ஒதுக்கம்		1,107,015,274.00	1,110,288,684.00
கூலி வேலை முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5(பி)		
நடைமுறைப் பொறுப்பு			
வைப்புக் கணக்கு	ஏசீஏ-4	86,628,076.00	2,205,522.00
கட்டுநிதி மீதி	ஏசீஏ-3		
மொத்த பொறுப்புக்கள்		**1,237,216,470.00**	**1,237,770,609.00**

பக்க இலக்கம் ...7..... முதல் ...51... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் ...52..... முதல் ...72..... உள்ளடக்கிய கணக்கு விபரங்களும் இந்தஇறுதிக் கணக்கிலேயே அடங்கிய பகுதியாகும்.இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கட்டு கோட்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டதுடன் இங்கு நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் பின்பற்றப்பட்டுள்ளன.மேற்படி இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை அதற்குரிய கணக்குப் பதிவுகள் மற்றும் ஏனைய கணக்கு தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன்ஒப்பு நோக்கப்பட்டுள்ளது என்பதையும், அவை அந்த எண்ணிக்கையுடன் இணங்குவதாக இத்தால் சான்றுப்படுத்துகிறோம்

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ ஆணையாளர்(நிதி)
பெயர்:	பெயர்:	பெயர்:
பதவி:	பதவி:	
திகதி : 27/02/2023	திகதி: 2023.02.24	திகதி : 2023/2/23
Janaka Dharmakeerthi Secretary Ministry of Plantation Industries 11th Floor, Sethsiripaya Stage II, Battaramulla.	A.P.P. DISNA Director General Department of Export Agriculture 1095, Sirimavo Bandaranayake Mawatha, Peradeniya	M.S.S.L. PEIRIS CHIEF ACCOUNTANT Dept. of Export Agriculture 1095, Kandy Road Peradeniya

3.3 நிதிப்பாய்ச்சல் கூற்று

2022 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பாய்ச்சல் கூற்று

விடயம்		உண்மையான	
		2022	2021
இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான நிதிப்பாய்ச்சல்			
மொத்த வரி பெறுகைகள்		-	-
கட்டணங்கள், அபராதம் அபராதங்கள் மற்றும் உரிமங்கள்		-	-
இலாபம்		-	-
வருமானமல்லா பெறுவனவுகள்			1,887,618
பிற வருமான தலைப்பு கூட்டப்பட்ட வருமானம்		87,252,987	42,968,775
கட்டு நிதி பெறுகை		1,633,160,000	1,179,550,000
முற்பணம் அறவிடல்		42,257,699	1,103,318
வைப்புக்கள் பெறுதல்		86,978,491	3,719,304
இயக்கத்தில் இருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசு (a)		1,849,649,177	1,229,229,014
கழி : பகிருவதற்கான காசு			
ஆளுக்குரிய வேதனாளிகள் மற்றும் இயக்க கொடுப்பனவுகள்		1,026,338,882	540,722,052
மானியங்கள் மற்றும் பரிமாற்ற கொடுப்பனவுகள்		5,770,416	6,896,502
பிற செலவு தலைப்பு மேற்கொண்ட செலவு		771,379,325	623,471,903
நிதி செலவுகள் - திறைசேரிக்கு கட்டுநிதி செலுத்தல்		119	1,927
முற்பனக் கொடுப்பனவுகள்		43,604,499	46,705,708
வைப்புக்கள்		2,555,937	3,305,186
இயக்கப்பாடுகளுக்காக வழங்கப்பட்ட மொத்த பணம் (b)		1,849,649,178	1,221,103,278
இயக்க செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் C=(a)-(b)		(1)	8,125,737
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிதிப்பாய்ச்சல்			
வட்டி		-	-
பங்கிலாபம்		-	-
பங்கிலாப செயன்முறை மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை		-	-
கடனிலிருந்து மீட்டெடுப்புகள்		-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த பணம் (d)		-	-
கழி : காசு பகிர்வு			
பௌதீக சொத்துக்களின் கொள்வனவு மற்றும் நிர்மானம் மற்றும் ஏனைய முதலீடுகளின் சுவீகரிப்பு		-	8,125,737
முதலீட்டு செயற்பாடுகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த காசு (d)		-	8,125,737
		-	
முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் F=(d)-(e)		-	(8,125,737)
இயக்க செயற்பாடுகள் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் g=(c)+(f)		(0)	0
நிதி செயற்பாடுகளில் இருந்தான நிதிப்பாய்ச்சல்			
உள்நாட்டு கடன்		-	-
வெளிநாட்டு கடன்		-	-
கொடைகள்		-	-
நிதி செயற்பாடுகளில் இருந்தான மொத்த காசு உருவாக்கம் (h)		-	-
கழி: காசு செலவினங்கள்			
அரச உத்தியோகத்தர்களின் முற்பனக்கணக்கு செலுத்துகை			
வைப்புக் கணக்கு செலுத்தல்			
நிதிச் செயற்பாடுகளுக்கான மொத்த காசு பகிர்வு (i)			
நிதிச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (j)=(h)-(i)			
காசு தேறிய அசைவுகள் (k)=(g)-(j)		-	-
ஜனவரி 1 ஆம் திகதி அன்று ஆரம்ப மீதி		-	-
டிசம்பர் 31 ஆம் திகதி அன்று காசு மீதி		-	-

3.4 நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 ஆம் ஆண்டிற்குறிய நிதிக்கூற்றுக்களை தயாரித்து கணக்காய்வாளருக்கு உரிய திகதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3.5.வருமான சேகரிப்புகளின் செயலாற்றுகை

ரூபா ,000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக
2002-01-01	அரச கட்டட வாடகை	2800	2800	2681	95.75
2002-02-99	கடன் வட்டி மற்றும் ஏனைய	5500	5500	5172	94.03
2003-01-00	விற்பனை மற்றும் கட்டனம்- திணைக்கள விற்பனைகள்	22000	22000	43263	196.65
2003-02-99	விற்பனை மற்றும் கட்டனம்- நிர்வாக கட்டணம் மற்றும் செலுத்தல்கள் நானாவித	1000	1000	760	76
2003-99-00	விற்பனை மற்றும் கட்டனம்- ஏனைய பெறுகைகள்	5000	5000	4910	98.20
2006-02-02	மூலதன சொத்து விற்பனை	100	100	177	177

3.6 ஒதுக்கிட்டு பயன்பாட்டின் செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு முடிவுறுத்தப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் விகிதமாக
	ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு		
மீண்டுவரும்	821,000	821,000	770,841	93.89
மூலதனம்	281,000	281,000	264,319	94.06
மொத்தம்	1,102,000	1,102,000	1,035,161	93.93

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏணனய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/மாவட்டச் செயலகம்/மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

தொ. இல	அமைச்சு/திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு பெற்றுத்தரப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் விகிதமாக
			ஆரம்ப	இறுதி		
01.	தோட்ட அமைச்சு	135-2-3-48-2509	918,350	918,350	655,467	71.37
		135-2-15-2-2507	73,031	73,031	69,811	95.59

3.8. நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதன குறியீடு	விபரக் குறியீடு	2022.12.31 திகதிய சுற்றாய்வு சபை அறிக்கை படி மீதி	2022.12.31 திகதிய நிதிநிலமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிடப்பட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்ற விகிதம்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	439,548	439,548		100
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	317,742	317,742		100
9153	காணி	349,723	349,723		100
9154	அருவமான சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்				
9180	குத்தகை சொத்துக்கள்				

3.9. கணக்காய்வாளர் அறிக்கை

CPCG/KD/F/DEA/C/2023/07 2023.05.24

கணக்கீட்டு உத்தியோகத்தர்
ஏற்றுமதி விவசாய திணைக்களம்

தலைப்பு -289 ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆவது பிரிவிற்கு அமைய கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்று

1.1.1. நிலபரகூற்றை கணக்கிடுவதற்கான அபிப்பிராயம்

தலைப்பு -289 ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ணக்கீட்டு உத்தியோகத்தரிடம் வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023மே மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் தாக்கங்கள் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலமைகள் மற்றும் அன்றைய திகதி முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதி பிரளாய்வுகள் பொதுவாக

ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளுக்கு இயைய உண்மையானதும் சாதாரணமானதுமான நிலைமைகள் பின்பற்றப்படுகின்றது என நான் நன்கு அறியேன்.

1.2. நிலபரகூற்றை கணக்கிடுவதற்கான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு அமைய எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் நிலபரக்கூற்று கணக்கிடப்பட்டது,இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இயைய தன்னால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் கணக்காய்வாளரது பொறுப்புக்கள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதியதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூறற்றுக்கள் தொடரப்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாய தினைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாய தினைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிபப்டுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடரப்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிபப்டுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டன. என்னால் மேலும்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தரப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடரப்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான மற்றும் முகாமைத்துவம் மூலம் செய்யப்பட்ட வெளிப்படுத்தல்கள் பாராட்டப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடரப்ாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 வேறு நாளாந்ததேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ). நிதிக்கூற்றுக்கள் முடிவடைந்த வருடத்தோடு இனங்கியமை

(ஆ). முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் தான் முன்வைத்திருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு இருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 மீண்டுவரும் செலவினம்

(அ). நிதி நிலமைக் கூற்றில் கண்காணிப்பு செயற்பாடுகளின் நிதியுதவி மற்றும் மாற்றல் செலவுகளின் மொத்தம் ரூபா 9,153,759 இனால் குறைவாகக் காட்டப்பட்டு இருந்தது.

(ஆ) நிதி நிலமைக் கூற்றில் கண்காணிப்பு செயற்பாடுகளின் ஆளுக்குரிய வேதனாளிகள் மற்றும்
கண்காணிப்பு செலவுகளின் மொத்தம் ரூபா 6,101,954 இனால் அதிகமாக காட்டப்பட்டு இருந்தது.

1.6.2 முற்பனச் செலுத்தல்கள்

அரச உத்தியோகத்தர்களது முற்பணக்கணக்கு " பீ " கணக்கு ஓய்வுநிலை பெற்ற மற்றும் சேவை முடிவுறுத்தப்பட்டடிருந்த உத்தியோகத்தர்கள் 09 பேரிடம் இருந்து 1 வருடம் 03 மாத கால இடைவெளி முதல் மொத்தமாகரூபா 559,607 கடன் மீதி அறவிடப்பட்டு இருக்க வில்லை.

1.6.3. நிதியல்லா சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ). மீளாய்வு வருட முடிவடையும் திகதியன்று திணைக்களத்திற்கு உரிய ஏக்கர் 112.24 (ஹெக்டேயர் 44.8943) காணிகள் 18 இன் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கில் இடப்பட்டு இருக்கவில்லை.

(ஆ). மீளாய்வு வருட முடிவடையும் திகதியன்று திணைக்களத்திற்கு உரிய70,320 சதுர அடியினைக் கொண்ட கட்டடங்கள் 49 இன் பெறுமதி இனங்காணப்பட்டு நிதியல்லாத சொத்துக்களின் (ஏசிஏ-06 மற்றும் எஸ்ஏ 82) கீழ் கணக்கில் இடப்பட்டு இருக்கவில்லை.

(இ). மீளாய்வு ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த ரூபா 8,206,747 நிதியலர்லாத சொத்துக்கள் நிதி நிலமைக்கூற்றில் கண்ணில் இடப்பட்டு இருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1. சட்டம், சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இயைய அமையாமை

பின்வருவன சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய இல்லாது இருந்தமை அவதானிக்கப்பட்டன.

	சட்டம், சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் அமைய	பெறுமதி	இனங்காமை
அ).	பாராளுமன்ற சட்டம் 2003 இன் 22 ஆம் இலக்கம் கொண்ட விதை சட்டத்தின் 08(01) பிரிவு.		2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு முடிவடையும் திகதி வரையான காலத்தினுள் நில்லம்ப உப ஆராய்ச்சி நிலையத்தில் கன்று உற்பத்தி செய்யப்பட்டு இருந்த போதிலும் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இருக்க வில்லை.
ஆ).	சுற்றறிக்கைகள் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03.்.2022 இலக்கம் கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கை	1இ130இ095	அத்தியவசிய சேவைகள் அல்லாத முன்னுரிமை வழங்க முடியாத திணைக்கள பணிமனையினுள் மற்றும் உத்தியோகத்தர்களது வசதிகள் பொருட்டு 09 சந்தர்ப்பங்களில்

நிதி செலவிடப்பட்டு இருந்தன.

3. கண்காணிப்பு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை

கண்டி மாவட்ட பணிமனை அமையப்பெற்றுள்ள காணி மஹவலி ஆற்றின் எல்லையில் அமையப் பெற்றுள்ளதோடு ஆற்றங்கரை அதிகம் அரித்துச் செல்லப்படுவதன் காரணமாக ஆற்றுப்பக்கமாக அமைக்கப்பட்டுள்ள மதில், ஒன்றுகூடல் அறை, மதில் மற்றும் இன்டர்லொக் கல் பரப்பியுள்ள முற்றம் வெடித்து வெள்ளத்திற்கு செல்லக்கூடிய நிலை அவதானிக்க முடிவதோடு உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதன் பொருட்டு போதிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை.

3.1.2. எதிர்பார்த்த முடிவு எல்லையை பெற்றுக் கொள்ளாமை

ஏற்றுமதி விவசாய உற்பத்திப் பண்ணைகள், விவசாயிகள், பதனிடுவோர் மற்றும் வியாபாரிகள் பதிவு செய்தல் மற்றும் இலங்கையில் மிளகு மற்றும் கறுவா பொருட்டு பூகால சுட்டிகள் (புஜ) பெற்றுக் கொள்வதற்கு உரிய செயற்பாடுகள் மேற்கொள்வதன் நோக்கில் 2020 ஆகஸ்ட் 27 ஆம் திகதி ஆகின்ற போது ரூபா 10,647,000 செலவிடப்பட்டு டெப்லட் கணனிகள் 300 கொள்வனவு செய்து நிறுவன மற்றும் கள உத்தியோகத்தர்கள் 300 பேரிட்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு ரூபா 1,505,000செலவிடப்பட்டு கணனி மென்பொருள் அபிவிருத்தி செய்யப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வு ஆண்டின் முடிவடைகின்ற நாளாகின்ற போது டெப்லட் கணனிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட 58 பேர் உரிய மென்பொருளை பதிவிறக்கம் செய்து கொண்டிருக்க வில்லை. அவ்வாறே உரிய கணனியை பயன்படுத்தி கடந்த இரண்டு வருடத்தினுள் மொத்தமாக கறுவா பண்ணையாளர்கள் 250,000 பேரில் 238 பேர் (நூற்றிற்கு 0.09) மிகக் குறைந்த அளவினரே பதிவு செய்யப்பட்டு இருந்தன. அந்த அளவினை பதிவு செய்வதனையும் டெப் கணனிகள் 29 இல் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே உரிய மென்பொருளை பயன்படுத்தி அக்காலப்பகுதியில் ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்திப் பண்ணைகள், பதனிடுவோர் மற்றும் வியாபாரிகள் பதிவு செய்தலின் பால் அவதானம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே இவ்வாறு ரூபா 1,505,000 செலவு செய்து மென்பொருள் ஒன்றினை அறிமுகம் செய்து அதன் பொருட்டு வருடாந்தம் ரூபா 135,000 என்றடிப்படையில் பராமரிப்பு செலவு செலுத்த வேண்டி இருந்த போதும், கருத்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதன் பொருட்டு மென்பொருள் பயன்படுத்தப்படவில்லை என்பது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கு அமைய ரூபா 12,152,000செலவு செய்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்த

கருத்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3.1.3. கருத்திட்டங்கள் மேற்கொள்வதில் தாமதம்

(அ). குண்டசாலை உப ஆராய்ச்சி நிலையத்தில் விசிறல் நீர் வழங்கள் வளையமைப்பை ஸ்தாபிக்கும் பொருட்டு முடிவடைந்த வருடம் மற்றும் மீளாய்வு ஆண்டின் ரூபா 399,599 செலவு செய்யப்பட்டு பொருள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்ததோடு மீளாய்வு ஆண்டின் முடிவடையும் திகதி ஆகின்ற போது உரிய நீர் வழங்கள் வளையமைப்பு செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஆ). நாரம்மல உப ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞான கூடத்திற்கு தொடர்பான புதிய இரண்டு மாடி கட்டடம் நிர்மானிகும் பொருட்டு 2018 ஆம் ஆண்டு ரூபா 29,200,000 பெறுமதியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதி ஆகின்ற போது முடிவுறுத்தப்பட்டு இருந்தது ரூபா 8,084,500 பெறுமதியான வேலை மாத்திரமே ஆகும். சுவர் கபராது வேலைகள் முடிவுறுத்தி இருக்காமையினால் கட்டடம் குறைவாகவே பயன்படுத்தப்பட்டு இருந்தது.

3.2 சொத்து முகாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ). திணைக்களத்தின் ஆராய்ச்சி நிலையங்கள் 03 உள்ள ஏக்கர் 17.3 நிலத்தில் எவ்வித

திறன்மிக்க பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு இருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ).திணைக்களம் பயன்படுத்துகின்ற பிற அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைக்கு

உரிய மொத்தம் 390 ஏக்கர் காணி பகுதிகள் 31 கையகப்படுத்தப்படும் நடவடிகைகைகள் முடிவுறுத்தப்பட்டு இருக்கவில்லை.

(இ). திணைக்களம் பயன்படுத்துகின்ற பிற அமைச்சுக்களுக்கு உரிய வாகனங்கள 34 கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஈ). வல்பிட திசு வளர்ப்பு நிலையத்தின் ரூபா 244,375 செலவு செய்யப்பட்டு நிர்மானிக்கப்பட்டு இருந்த விசிறல் நீர் வளையமைப்பு 03 வருடகாலம் முதல் பயன்படுத்தாது காணப்பட்டது.

4. மனிதவள முகாமை

மீளாய்வு ஆண்டு முடிவடையும் திகதி அன்று அனுமதிக்கப்பட்ட பதவியனியனிர் உண்மையான பதவியணியினருடன் ஒப்பிடுகையில் 339 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றுள் சிரேட்ட மட்டத்தில் நிலவிய வெற்றிடங்கள் 24 இல் 23 இலங்கை விஞ்ஞான சேவைக்கு உரிய உதவி பணிப்பாளராக காணப்படுவதோடு அது திணைக்கள நடவடிக்கைகள் தொடர்பில் அதிகளவில் பாதிப்பு செலுத்துகின்றது. மாவட்ட விடயவிதான கருத்திட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் 170 காணப்பட்டதோடு அது கள நடவடிக்கைகளை முறையாக நடாத்திச் செல்வதில் இடையுறு காணப்படுவதோடு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பதவிகள் 84 அனுமதிக்கப்பட்டு இருந்த போதிலும் அந்த பதவிகள் பொருட்டு எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் ஆட்சேர்ப்பு செய்து இருக்கவில்லை. அவ்வாறே பண்ணை முகாமையாளர் பதவிகள் 21 இல் 11 வெற்றிடமாக காணப்படுகின்றன.

எச்.ஏ.ஆனந்த
சிரேட்ட உதவி கணக்காய்வாளர்
கணக்காய்வாளருக்காக

அத்தியாயம் 04
செயற்திறன் குறிகாட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்திட்டத்தின் அடிப்படையில்)

4.1.1. ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத் திட்டம்

ஏற்றுமதி விவசாய துரை மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்வதன் ஊடாக உள்நாட்டு பொருளாதாரத்தை உயர்த்துதல் மற்றும் அதன் மூலம் அன்னியச் செலாவனியை ஈட்டும் நோக்கில் 2022 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரியின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 250.00 மில்லியன் ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 240.85 மில்லியன் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு செலவிடப்பட்டது.

வேலைத்திட்டம்	ஒதுக்கப் பட்ட ஒதுக்கீடு	இலக்குகள்
பயிர்ச் செய்கை பரப்பளவை மேம்படுத்தும் வேலைத்திட்டம்	43.24	• ஹெக்டேர் - 365 • சிறு அளவிலான வீட்டுத் தோட்ட கன்றுகள் - 176,762 • வீட்டுத் தோட்ட கன்றுகள் -86,530 • கூட்டு கிராம வேலைத்திட்டத்தின் கீழ் கன்றுகள் - 152,000 • மஞ்சள் மற்றும் இஞ்சி முதலீட்டு கொடை வேலைத்திட்டம் 60 ஹெக் • பாக்குச் செய்கை – பாக்கு கன்றுகள் 180,000
மத்திய நாற்று மேடை அபிவிருத்தி	26.50	• பாக்கு விதை – 40,000 • சாதிக்காய் விதை – 3,000 • பொலிதீன் பேக் மற்றும் ஏனைய உள்ளீடுகள் • பாத்திர ஊடகம் கொள்வனவு • நீர் வழங்கள் வளையமைப்பு தாய் தாவர தோட்டம் ஸ்தாபித்தல்
ஏற்றுமதி விவசாய பயிர் திறன் மேம்படுத்தும் வேலைத்திட்டம்	37.17	• கைவிடப்பட்ட கன்று பெற்றுக் கொடுத்தல் - 890 ஹெக். • விலங்குகளின் பாதிப்புக்கள் தவிர்த்தல் - 25 அலகுகள். • சிறுநீர்ப்பாசனம் - 10 அலகு • பெறுமதி சேர்க்கப்பட வேலைத்திட்டம்
பெறுமதி சேர்க்கப்பட் வேலைத்திட்டம்	34.00	• ஹெக்டேயர் - 15 • அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப உபகரணம் - 400 • சந்தை மேம்பாட்டு வேலைத்திட்டம் - 10 • விவசாய உதவி – 50 • வாசனைத்திரவிய தோட்ட மாதிரிகள் - 10 • மென்பொருள் பயன்பாடுகள் - 1 • மென்பொருள் அபிவிருத்தி – 10 • சேதன சான்றிதழ் - 10 • GMP / GAP / ISO / BRC - 15
ஊடக மற்றும் தொடர்பாடல்	20.00	• மின்னியல் ஊடகம் - 100 • அச்சு ஊடகம் - 50 • துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் - 200,000 • கன்காட்சிகள் - 04 • தகவல் தொடர்பாடல் 10,000
திறன் அபிவிருத்தி	1.65	• விவசாயிகளுக்கான பயிற்சி 1,000 • களநாட்கள் 150 • உத்தியோகத்தர் பயிற்சி 22 • வேலையரங்கு கருத்தரங்கு 11 • பயிற்சி, மாத்தறை கறுவா ஆராய்ச்சி நிலையம் - 50
நிர்வாகச் செலவுகள்	6.07	
2021 ஆம் ஆண்டு உள்ள பற்றுச்சீட்டுகள் செலுத்துகை	81.37	
மொத்த ஒதுக்கீட்டின் அளவு	250.00	

2022 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்திலும் புதிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அதற்கு அமைய ஏற்றுமதி விவசாய பயிர்ச் செய்கை நடுகை பரப்பளவை அதிகரிக்கும் நோக்கில் செயற்படுத்தப்படுகின்ற புதிய அபிவிருத்தி பயிர்ச் செய்கை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கறுவப்பட்டை, மிளகு, சாதிக்காய், கிராம்பு, கொக்கோ, கோப்பி, ஏலக்காய், போன்ற ஏற்றுமதி விவசாய பயிர்கள் 272.11 ஹெக்டேயரில் புதிய நடுகை நிலப்பரப்பின் கீழ் பயிரிடப்பட்டன,

இல்லப் பயன்பாட்டின் பொருட்டு தேவையான வாசனைத் திரவிய வீட்டுத் தோட்டங்களின் ஊடாக உற்பத்தி செய்து கொள்ளல், வீட்டுத் தோட்டத்தின் மூலம் சிற்றளவிலான பொருளாதார பயிர்ச் செய்கைகளை உருவாக்கல், பேரளவில் பயிர் செய்கைப் பண்ணப்படாத ஏற்றுமதி விவசாய பயிர் கூட்டுக் கிராமமாக பயிர் செய்கை மேற்கொள்ளல், நிலத்தின் திறனை மேம்படுத்தும் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் சிறிய அளவில் மேம்படுத்தும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

மேலும், 0.25 ஏக்கருக்கும் குறைவான ஒரு சிறிய வீட்டுத் தோட்டத்தின் உச்ச பொருளாதார நன்மைகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் சிறிய வீட்டுத் தோட்டத் திட்டம் மற்றும் செழிப்புள்ள வீட்டுத் தோட்டத் திட்டத்தின் கீழ் மரக் கன்றுகள் 84,901 பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் மற்றும் செழிப்புள்ள வீட்டுத் தோட்ட செய்கையின் கீழ் 27,820 மரக் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கொத்தனிக் கிராம வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கிராமம் அல்லது பல கிராமங்களை ஒருங்கிணைத்து கூட்டுக் கிராம வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. ஒரு கூட்டு கிராமத்தின் பொருட்டு ஆகக் குறைந்தது 25 உறுப்பினர்கள் இருக்குமாறு கூட்டுக் கிராம வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இங்கு குழுவாக ஒழுங்கமைக்கப்பட்டு கன்று வினியோகிப்பது முதல் அறுவடை செய்து சந்தைப்படுத்தும் சந்தர்ப்பம் வரை முறையான திட்டமிடல் தயாரிக்கப்பட்டு விவசாயிகளை உயிர்ப்பிப்பதற்கும் மற்றும் சந்தைகளை ஒருங்கிணைப்பு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. இந்த கூட்டுக் கிராம வேலைத்திட்டத்தின் கீழ் ஏலம் மற்றும் சாதிக்காய் கன்றுகள் 41,456 பெற்றுக் கொடுக்கப்பட்டன.

வீட்டுத் தோட்டச் செய்கையின் பொருட்டு மஞ்சள் கன்றுகள் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டதுடன்,இல்லப் பணன்பாட்டின் பொருட்டு தேவையான மஞ்சள் மற்றும் இஞ்சி தேவைப்பாட்டை தமது வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்வதை இலக்காகக் கொள்ளப்பட்டது. அத்துடன் இதன் கீழ் 20.7 ஹெக்டேயர் நிலப்பரப்பில் மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கை மேற்கொள்ளப்பட்டது.

2022 ஆம் ஆண்டு பாக்குச் செய்கை வேலைத்திட்டம் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்டன. அத்துடன் சூழல் பாதுகாப்பு செய்வதை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது. இந்த பாக்குச் செய்கை மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் பாக்கு கன்றுகள் 183,859 அளவு வீட்டுத் தோட்ட, அரச, தனியாரர் நிறுவனங்கள் மற்றும் தோட்ட கம்பனிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன

உயர்தரமான நடுகை பொருள் செய்கையாளர்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு கன்று உற்பத்தி வேலைத்திட்டமும் இந்த வேலைத்திட்டத்திற்கு இனையாக செயற்படுத்தப்பட்டது. திணைக்கள வேலைத்திட்டத்தின் பொருட்டு தேவையான வருடாந்த கன்றுகள் திணைக்களத்தின் ஊடாக நேரடியாக நடாத்திச் செல்லப்படுகின்ற நாற்று மேடைகள் 12 மூலம் மற்றும் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் நாற்று மேடைகளின் ஊடாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டது. உட்டகட்டமைப்பு வசதிகள் தேவைப்பாட்டை வழங்குதல், நடுகை பொருள் மற்றும் நடுகை ஊடகம் வழங்குதல் வருடாந்த கன்று தேவைப்பாட்டை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் தனியார் நாற்று மேடைகள் 755 இற்கு தேவையான வழிகாட்டல்கள் கன்று உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டு திணைக்களத்தின் நாற்று மேடைகளின் கன்று உற்பத்தி 17.58 மில்லியன் ஆகும்.

ஏற்றுமதி விவசாய பயிர்ச் செய்கையாளர்களின் உச்சத்திறனை பெற்றுக் கொள்வதன் பொருட்டு நிலவும் செய்கையாளர்களின் செயற்திறனை மேம்படுத்துவது அத்தியவசியமாகும். இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக நடுகை அலகு நில அளவினை பெற்றுக் கொண்டு அறுவடை அளவினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு அமைய 2022 ஆம் ஆண்டு உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வேலைத்திட்டம் தொடராக செயற்படுத்தப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்ட அல்லது விடுபட்ட பகுதிகளில் நடுகை மேற்கொள்வதற்காக தேவையான நாற்றுக்கள் வழங்கப்பட்டன. அதற்கு அமைய காலியாக இருந்த பகுதிக்கான நடுகை திட்டத்தின் கீழ் 828.85 ஹெக்டேர் நிலப்பரப்பில் மீள்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்தும் பயிர்களுக்கு ஏற்படுகின்ற எதிர்பாராத சுற்றுச்சூழல் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்தும் மற்றும் வன விலங்குகளினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களில் இருந்தும் பயிர்ச் செய்கையாளர்களது பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு திணைக்களத்தினால் 50% செலவில் 02 அலகு சிறுநீர்ப்பாசன முறைகள் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன. மற்றும் பயிர் செய்கைக்கு விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளும் பொருட்டு 50% செலவை திணைக்களம் மேற்கொண்டது அத்துடன் பாதுகாப்பு வேலிகள் 12 நிர்மானிக்கப்பட்டன.

இலங்கை வாசனைத் திரவிய பொருட்களின் பொருட்டு உள்நாட்டில் போலவே உலகளாவிய சந்தையிலும் அதிகளவில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒரு உபாயமாக தற்போது புதிதாக உருவாகி உள்ள சந்தை வாய்ப்புகளை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான ஒரு மூலோபாயமாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் அடையாளம் காணப்பட்டதுடன் அதன் கீழ் மிகவும் தரமான உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகம் செய்து வைத்தல், அதற்காக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் சான்றளிக்கப்பட்ட சேதன பண்ணைகள் நிறுவப்பட்டது. பதனிடல் நிலையங்கள் மற்றும் அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பத்தை உயர்தரமான அளவில் பேனுவதன் பொருட்டு இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப முதலீட்டு கொடை திட்டத்தின் கிழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கறுவா பதனிடல் நிலையங்கள் 42 உம், ஏனைய பதனிடல் நிலையங்கள் 03 உம் கேந்திர பதனிடல் நிலையங்கள் 04 இன் பொருட்டும் முதலீட்டு கொடை பெற்றுக் கொடுக்கப்பட்டன. அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப இயந்திர உபகரணங்களின் ஊடாக அறுவடைகளில் உச்ச தரத்தினை பெற்றுக் கொள்ளல் மற்றும் மனித சக்தியை குறைவாக பயன்படுத்துவதன் ஊடாக செலவினை குறைக்கும் பொருட்டு இயந்திர உபகரணங்கள் 97 உம் மற்றும் கறுவா எண்ணெய் பிரித்தெடுப்பு அலகுகள் 13 இன் பொருட்டும் கொடை பெற்றுக் கொடுக்கப்பட்டன.

உபகரண வகை	எண்ணிக்கை
உலர்த்தி	30
மிளகு விதை ஒதுக்கீட்டு இயந்திரம்	19
மிளகு சூடான நீர் சிகிச்சை கருவிகள்	02
மிளகு கல் மண் நீக்கும் இயந்திரம்	01
வாசனைத் திரவிய அறைப்பு இயந்திரம்	06
கோப்பி பல்பர்	01
கோப்பித் தோல் அகற்றும் இயந்திரம்	01
கோப்பி வருத்தல் இயந்திரம்	02
மஞ்சள் ஸ்ரீமர்	05
இஞ்சி மஞ்சள் துண்டாக்கல் இயந்திரம்	14
மஞ்சல் கூழ் தயாரிக்கும் இயந்திரம்	01
கறுவா துண்டாக்கள் இயந்திரம்	01
தராசு	01
பொலிதீன் சீலர்	02
பாதுகாப்பான கதிரடிப்பு	01
புல் வெட்டும் இயந்திரம்	04
அலுமினிய ஏணி	03
செய்கை நிலத்தில் கன்று நடுகைக்கான குழி தோண்டும் இயந்திரம்	03

- 2022 ஆம் ஆண்டு வருடாந்தம் நடாத்தப்படுகின்ற தூய கறுவா கொண்டாட்டம் டிசம்பர் 17 ஆம் திகதி தொடராக அமைச்சர், அமைச்சின் உத்தியோகத்தர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கறுவாச் செய்கையாளர்களது பங்குபற்றுகையுடன் காலி, சீனிகம தெவோல் தேவாலய வளாகத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது.

- 2022 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாய பயிர்கள் தொடர்பில் தொழில்நுட்ப அறிவு மற்றும் அப்பயிர்களை மேம்பாடு செய்வதனை நோக்காகக் கொண்டு ஊடகங்களை பயன்படுத்திக் கொள்கின்ற முறைமையின் கீழ் திணைக்களத்தின் சகல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் விவசாய மக்களுக்கு தொடர்பாடலை இலகுபடுத்தும் பொருட்டு தேசிய தொலைக்காட்சி சேவையான ரூபவாஹினி சேவையின் கீழ் "செகவுனு கஹவுனு" எனும் பெயரில் அறிக்கை வேலைத்திட்டங்கள் 24 மற்றும் "ரன்மசு உயன" எனும் பெயரில்

